# தேன் சிட்டு

பெ. தூரன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

இரண்டாம் பதிப்பு: ஏப்ரில், 1963

விலை ரூ. 1·25

சுதந்திர நிலைய வெளியீடு—12

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

# முன்னுரை

முன்பே நான் இரண்டு கட்டுரைத் தொகுதிகள் வெளியிட்டிருக்கிறேன். அவற்றிற்கும் இந்தத் தொகுதிக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. அதைப்பற்றிக் குறிப்பாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லவே இந்த முன்னுரையை எழுதுகிறேன்.

வண்ணத்திலும், மணத்திலும் மாறுபட்ட பல மலர்களைக் கொண்டு ஒரு மாலை தொடுக்கலாம்; ஒரே வகையான மலர்களாலேயும் தொடுக்கலாம். **பூவின் சிரிப்பு, காட்டு வழிதனிலே** என்ற எனது கட்டுரைத் தொகுதிகள் முதலிற் குறிப்பிட்ட மாலையைப் போன்றவை. 'பலசரக்குக்' கொண்டவை, ஒரே உள்ளத்தின் எண்ணச் சித்திரங்கள் என்றாலும் பொருள்கள் வேறு வேறானவை. அவற்றிற்குள்ளே தொடர்பிருக்க வேண்டுமென்ற எண்ணம் அங்கே இல்லை.

தேன் சிட்டு வெவ்வேறு வகையான மலர்களை நாடுகின்றது என்பது மெய்தான்; ஆனால் அதன் அடிப்படை நோக்கம் ஒன்றே என்பதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது.

தேன் சிட்டுத் தொகுதியிலும் அந்த அடிப்படை ஒருமையைக் காணலாம். வெவ்வேறு கோணங்களிலிருந்து கட்டுரைச் சித்திரங்களைத் தீட்டியிருந்தாலும் அவற்றிற்கு உட்கிடையாக உள்ளது ஒரே பொருள்தான்.

வெவ்வேறு நூலிழைகளிலே கோத்த பலவகை மணிகளைக் கொண்டு ஒரு மாலை கட்டலாம்; ஒரே நூலிழையிலும் பல மணிகளைக் கோத்து மாலையாக்கலாமல்லவா? இவ்வாறு கோத்து மாலையாக்கும்போது அந்த நூலிழைக்குப் பொருத்தமாக அமையாதனவான மணிகளை விலக்கவேண்டி நேரும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்தத் தொகுதியிலே ஒரு சில கட்டுரைகளே சேர்க்கப்டுள்ளமைக்குக் காரணம் இப்பொழுது விளங்கலாம். இன்று ஓங்கி முழங்க வேண்டிய வாழ்க்கை இலட்சியம் 'அன்பு செய்தல்' என்ற ஒன்றேதான். அந்த மாணிக்க இழையிலே செல்லக்கூடிய எண்ணச் சித்திரங்களையே இங்கு கோவை செய்திருக்கிறேன்.

ஒரே இழையில் கோத்த மணிகளைக் கொண்ட மாலைக்கு இதனை ஒப்பிட்டேனல்லவா? மணிகளின் மதிப்பைப்பற்றி நான் சொல்ல முடியாது; சொல்லவும் கூடாது. ஆனால் இழை மட்டும் மாணிக்கம் என்பதைத் துணிச்சலோடு கூறுவேன்.

பெ. தூரன்.

# உள்ளுறை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தேன் சிட்டு | ... | 7 |
| 2. | ஆமையும் முயலும் | ... | 13 |
| 3. | காலச் சக்கரம் | ... | 18 |
| 4. | உள்ளத்தின் விரிவு | ... | 22 |
| 5. | முருங்கைமர வேதாளம் | ... | 26 |
| 6. | முரண்பாடுகள் | ... | 32 |
| 7. | குழலோசை | ... | 38 |
| 8. | அன்பு வழி | ... | 44 |
| 9. | அமைதியும் இன்பமும் | ... | 52 |
| 10. | பல்லி வாழ்க்கை | ... | 59 |
| 11. | குறிக்கோள் | ... | 65 |

## சமர்ப்பணம்

மு. மு. ஆயண்ணன் சகோதரர்களுக்கு

"உங்கள் அன்பின் பெருக்கை என்னைப்போல்
வேறு யார் உணர்ந்து அநுபவித்திருக்க முடியும்?"

பெ. தூரன்

# தேன் சிட்டு

அதிகாலையிலே எத்தனை பறவைகள் இந்தச் சிறிய தோட்டத்திற்கு வருகின்றன! நான் படுக்கையி லிருக்கும்போதே கரிச்சான் என்னும் இரட்டை வால் கரிக்குருவி என்னை எழுந்திருக்குமாறு கூவியழைக் கிறது. காகம் கரைவதற்கு முன்னால், சேவல் தன் குரலெடுத்துக் கதிரவன் வருகையை உலகத்திற்கு அறிவிப்பதற்கும் முன்னாலேயே கரிச்சான் கூவத் தொடங்கி விடுகிறது. "கரிக்குருவி கூவுகிறது. விடியும் நேரமாகிவிட்டது. வேலைக்குப் புறப்பட லாம்" என்று எங்கள் ஊரிலே உழவர் பேசிக்கொள் வதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

இந்தக் கரிச்சானுக்குத் தரையிலே அமர்வது அவ்வளவு பிடிக்காது. வசதியான உயர்ந்த இடத் தில் அமர்ந்துகொண்டு பறந்து வரும் பூச்சிகளை அது வேட்டையாடும். புனங்களிலே மேயும் செம்மறி ஆட்டின் முதுகிலே அமர்ந்து பூச்சி வேட்டையாடு வதில் இதற்கு அலாதியான விருப்பம் உண்டு. செம் மறியாடு மேய்ந்துகொண்டே செல்லும்; அதன் காலருகிலே புல்லில் பதுங்கியிருக்கும் விட்டில் முதலிய பூச்சிகள் அஞ்சித் தாவி வேறிடத்திற்குப் பறந்து செல்ல முயலும். கரிச்சான் ஒரே பாய்ச்ச லிலே பாய்ந்து அவற்றை ஒவ்வொன்றாகத் தன் வாயிலே போட்டுக்கொள்ளும். இந்தக் குருவியை

எனக்கு அவ்வளவு பிடிக்காது. அதன் காரணத்தைப் பின்னால் கூறுவேன்.

கரிச்சானுக்குப் பிறகு எங்கள் தோட்டத்திற்கு வருவது தேன் சிட்டு. அது அழகான சிறிய குருவி. அதன் கரிய மூக்கு நீண்டு முனையில் சற்று வளைந் திருக்கும். குருவியின் முதுகு கறுப்பாக இருக்கும்; வயிற்றின் பகுதி இலேசான மஞ்சள் கலந்த வெளுப்பாக இருக்கும். பெண் சிட்டின் முதுகிலே கருமைநிறம் குறைவு. பளபளப்பாக நாவற்பழம் போல் முழுதும் ஒரே கறுப்பாகவுள்ள தேன் சிட்டு வகையும் இருக்கிறது. அதுவும் சில நாட்களிலே வருவதுண்டு.

தேன் சிட்டின் சுறுசுறுப்பைப்போல நான் வேறெங்கும் கண்டதில்லை. இறக்கைகளை நொடிக்கு நொடி விரித்து விரித்து மூடி மூடி ஓடி ஓடி ஒவ்வொரு சிறிய கிளையிலும் அமர்ந்து அங்குள்ள மலர்களிலே அது தேனருந்துவதைப் பார்ப்பது எனக்கு எல்லை யில்லாத மகிழ்ச்சியளிக்கிறது. அதன் நீண்ட மூக்கை மெதுவாக மலருக்குள்ளே வைத்து மலரின் அடிப் பகுதிலேயுள்ள தேனை அருந்துகிறது. ஒவ்வொரு மலரையும் அது முத்தமிட்டுத் தேன் பருகுகிறது என்று நான் எண்ணுகிறேன். அந்தக் குருவியிடத் திலே எனக்கு மிகுந்த விருப்பம் உண்டு.

தன் பசியைப் போக்கிக் கொள்வதற்காகத்தான் தேன் சிட்டு மலரிலுள்ள தேனைக் குடிக்கிறது; இருந் தாலும் அதே வேளையில் அது மலருக்கும் உதவு கிறது. மலருக்குள்ளே முழுகி முழுகி வெளியே

தோன்றும் அதன் கரிய அலகை நான் ஊன்றிப் பார்த்திருக்கிறேன். அதிலே பொன் மயமான மகரந்தத் தூள் ஒட்டியிருக்கும். தேன் சிட்டுத் தன் அலகால் ஒரு மலரிலுள்ள மகரந்தத் தூள் மற்றொரு மலருக்குச் சேர்ந்து அம்மலர் பயன் பெறுமாறு செய்கின்றது. இவ்வகையில் மரம், செடி, கொடிகளின் இனம் பெருகி ஓங்குவதற்கு இந்தத் தேன் சிட்டு உதவுகிறது. உண்ட வீட்டுக்கு உவந்து தொண்டு புரியும் இச்சிட்டின் தன்மை என் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது.

தேன் சிட்டிற்குப் பின்னுல் எங்கள் தோட்டத்திற்கு வருவது மைனு. இதை அழகுநாக்குருவி என்பார்கள். அழகாகப் பேசக்கூடிய திறமைவாய்ந்த சிறு பறவையாதலால் இதற்கு அப்பெயர் வந்திருக்கிறது.

மைனுவைப் பெரும்பாலும் இணையாகவே காணலாம். ஆணும் பெண்ணும் ஒன்றை விட்டு ஒன்று பெரிதும் பிரியாமலிருந்து இரை தேடும். மைனு நிலத்தில் அமர்ந்தே பூச்சி பிடிக்கின்றது.

தேன் சிட்டைப்போலவே கரிக் குருவியும் மைனுவும் வேறொரு வகையில் பயிர் பச்சைகளுக்கு உதவுகின்றன. பயிர்களையும், செடிகளையும் அழிக்கும் புழுக்களையும், விட்டில் முதலிய பூச்சிகளையும் வேட்டையாடி அவை ஒழிக்கின்றன. தாவரங்களில் இனவிருத்திக்குத் தேன் சிட்டு உதவுகிறதென்றுல், அவற்றிற்குத் தீங்குசெய்யும் பகைவர்களை ஒழிப்பதில் மற்ற இரண்டு குருவிகளும் உதவுகின்றன.

இருந்தாலும் என் உள்ளம் தேன் சிட்டின் இன்பப் பணியையே பெரிதாக மதிக்கிறது. கொன்று செய்கின்ற தொண்டைவிடத் துன்பங்கலவாத இன்பத் தொண்டைச் செய்வது மேல்.

இரண்டும் தேவைதான் என்று பலர் வாதிக்கலாம். அவ்வாறு வாதிக்க அவர்களுக்கு நல்ல ஆதாரங்களும் இருக்கலாம். "கீதையிலே கண்ணன் நமக்கு எடுத்துக்காட்டும் உண்மையை மறுக்க முடியாது" என்றும் சிலர் தலை நிமிர்ந்து பேசலாம்.

நான் அவர்களோடு வாதாட வரவில்லை. எனக்கு எது பிடித்திருக்கிறது என்று கூறவே இங்கு விரும்புகிறேன்.

சுவை என்பது விநோதமானது. நாக்கின் சுவையும் அப்படித்தான். ஒருவனுக்குப் பிடிப்பது மற்றொருவனுக்கு அதே அளவில் பிடிக்குமென்பதில்லை. மாம்பழத்தின் சுவையையே நாடுவோர் உண்டு. சிலருக்கு மாம்பழம் அலுத்துப் போகும்; ஆனால் மிளகாய்ப்பழத்தின் சுவை என்றும் அலுக்காது. அது போலத் தேன் சுவையைவிடப் புழுவின் ஊன் சுவை மைனாவுக்குப் பெரிதும் உகந்ததாக இருக்கலாம். நான் அதைப்பற்றி ஆராய முயலவில்லை. ஆனால் செடி கொடிகளுக்கு அது செய்யும் சேவை துன்பங் கலந்ததாயிருப்பதால் அது தேன் சிட்டின் சேவையைப்போல அவ்வளவு என் உள்ளத்தைக் கவரவில்லை என்பதைக் கூறிக்கொள்ளவே விரும்புகிறேன்,

நேற்றுக் காலையிலே தேன் சிட்டும் மைனாவும் எங்கள் சிறிய தோட்டத்திலே சுறுசுறுப்போடு தங்கள் பணியிலே ஈடுபட்டிருந்தன. தேன் சிட்டுப் பறந்து பறந்து செடியின் கிளைகளில் அமர்ந்து மலர் களில் தேன் குடித்துக் கொண்டிருந்தது. மஞ்சள் நிறமான வாயையுடைய மைனா நிலத்திலே நடந்து சென்று பூச்சி பிடித்துக்கொண்டிருந்தது. நான் அவற்றைக் கவனித்துக்கொண்டு அசையாது நின் றிருந்தேன்.

வயிற்றுக்கு உணவு தேடுவதிலே நாட்டங் கொண்டிருக்கும் அந்தக் குருவிகளின் செயல்கள் என் சிந்தனையைக் கிளறின. மைனாவைப் போலல்லாமல் தேன் சிட்டைப்போல மனிதன் வாழ முடியாதா என்ற கேள்வி என் உள்ளத்திலே எப்படியோ எழுந் தது. மனிதனுக்குச் சோறு வேண்டும். அவனை ஆட்டி வைக்கிற வலிமை வாய்ந்த சக்திகளென்று கருதப்படுபவைகளில் பசியும் ஒன்று. அந்தப் பசியின் சின்னமாக இருப்பது வயிறு. வாழ்க்கையில் இந்த வயிற்றுப்பாடே பெரும்பாடாக முடிந்திருக்கிறது. பொதுப்படையாகப் பார்க்கும்போது வயிற்றைத் திருப்தி செய்யும் முயற்சி மனிதனுக்கும் இந்தக் குருவிகளுக்கும் ஒன்றுதான். மனிதன் அந்த முயற்சி யிலே தேன் சிட்டைப் பின்பற்றக்கூடாதா என்பது தான் எனது கேள்வி. கரிச்சானையும் மைனாவையும் விட்டுத் தேன் சிட்டையே பின்பற்ற வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

உணவு தேடும் முயற்சியிலே மைனா தனது சொந்த இனத்திற்கு யாதொரு கொடுமையும்

இழைப்பதில்லை; பூச்சி, புழுக்களின் இனங்களுக்கே அது கொடுமை செய்கிறது. மனிதன் தனது உணவுத் தேட்ட முயற்சியிலே மற்ற இனங்களுக்குக் கொடுமை செய்வதோடு தன் இனத்திற்கும் கொடுமை சூழ்கிறான். அந்த வகையில் அவன் மைனாவுக்கும் ஒருபடி தாழ்ந்து விடுகிறான் என்று சொல்லத் தோன்றுகிறது.

மனிதன் தனக்குள்ள அறிவாற்றலின் உதவியால் கொடுமை தவிர்த்து வாழ முடியும். தேன் சிட்டின் வாழ்க்கையைக் கடைப்பிடிப்பது அவனுக்கு அரிதல்ல. அவனுடைய அறிவு அதற்கு வேண்டிய வழிகளை நிச்சயமாக வகுக்கும். அன்பிலே தோய்ந்த பரந்த மனப்பான்மையும், தேன் சிட்டையே பின்பற்ற வேண்டும் என்ற உறுதியுமே தேவை.

எங்கள் சிறிய தோட்டத்திலே தேன் சிட்டைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு இந்த எண்ணம் தோன்றுகிறது.

# ஆமையும் முயலும்

ஆமையும் முயலும் ஓட்டப் பந்தயத்தில் ஈடு பட்ட கதையைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். முயல் வெகு வேகமாகப் பாதித் தொலைவிற்கு ஓடிற்று. ஆமை அதற்குள்ளாகப் பத்தடிகூட நகரவில்லை. அதை அறிந்து இறுமாந்த முயல் கொஞ்ச நேரம் இளைப்பாறிவிட்டுப் போகலாமே என்று செடி மறைவில் படுத்து நன்றாக உறங்கிவிட்டது. உள்ளந் தளராமல் விடா முயற்சியோடு ஊர்ந்து சென்ற ஆமை போட்டியிலே வெற்றி பெற்றது. ஆமையின் வெற்றியைக் கண்டு குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் அளவில்லா மகிழ்ச்சி உண்டாகிறது.

முயலைப்போல வேகமாகச் செல்லும் நாடுகள் உலகத்திலே பல உண்டு; ஆமைக் கூட்டத்திலே சேர்ந்த நாடுகளும் உண்டு.

ஏன், நாடுகள் மட்டுமா இப்படிச் சாதி பிரிகின்றன? மனிதருக்குள்ளேயும் இவ்வாறு இனம் பிரிகின்றவர்கள் இருக்கிறார்கள்.

சில வகுப்பினர் எப்படியோ முயலின் வேகத்தைப் பெற்று முன்னேறியிருக்கிறார்கள்; சில வகுப்பினர் இப்பொழுதுதான் காலடி யெடுத்துவைத்து நகரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆமைக்குள்ள விடாமுயற்சியும் மனத்திடமும் அவர்களுக்குண்டோ என்னவோ இனிமேல்தான் தெரிய வேண்டும்.

ஆனால் முயலை வெல்லவேண்டும் என்ற ஆவல் மட்டும் இருக்கிறது. இந்த ஆவல் ஆத்திரமாகவும் வெறியாகவுங்கூட மாறுவதுண்டு.

உலகத்தை நாம் நடுநிலைமையோடு நோக்கினால் பலவேறு நாடுகளிலும், பலவேறு இனங்களிலும் இந்த இரண்டு சாதிகளினிடையே இன்று ஓயாத போட்டியிருப்பதை உணரலாம்.

வேகத்திலே பித்துக் கொண்டவர்கள் உண்டு. ஒலியின் வேகத்தை முந்திக்கொண்டு பாய்ந்து செல்லக்கூடிய விமானங்கள், படைக்கலங்கள் தோன்றிவிட்டன. அவற்றைக் கண்டுகூட அவர்கள் பித்தம் தெளியவில்லை. அவற்றைவிட வேகமாகச் செல்ல வேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். வேகமே ஒரு வெறியாகி விடுகிறது.

ஒரே இடத்தில் நிலையாக அமர்ந்துகொண்டு அல்லது மெதுவாகத் தனிவழியில் சென்றுகொண்டு ஏதாவது ஒரு நல்ல கவிதையைப் படித்து அதன் கற்பனையோடு எனது உள்ளத்தையும் வேகமாக வானிலே பறக்கவிடுவதில் எனக்கு அடங்காத ஆசையுண்டு. அந்த ஆசையால் மனோவேகங்கூடச் சில சமயங்களிலே எனக்கு ஆமை நடைபோலத் தோன்றும்.

"அரிய செயல்களைச் செய்து சாதிக்கக்கூடிய மனத்திடன் பெற்றவர்கள் செயலிலே ஈடுபடுகிறார்கள்; அப்படிப்பட்ட மனத்திடன் இல்லாதவர்களும் தன்னம்பிக்கை யற்றவர்களும் அவற்றைச் செய்து முடிப்பதாக மனக்கோட்டை கட்டிக் கொண்டு உளநிறைவு பெறுகிறார்கள்" என்று உளவியல் கூறுகிறது. ஆனால் மனக்கோட்டை கட்டு

வதை நான் இங்கு குறிப்பிடவில்லை; கற்பனைத் திறனையே நான் உள்ளத்திற்கொண்டு பேசுகிறேன். எவ்விதமான மனக்கோட்டை கட்டுகிறவனும் அதற்குத் தன்னையே நாயகனாகக் கொள்ளுகிறான். வாழ்க்கையிலே தன்னால் சாதித்துக்கொள்ள முடியாத இச்சைகளை அவன் தன் ஆகாயக் கோட்டையிலே அனுபவித்து ஒருவிதமான உளநிறைவு பெறுகிறான். இவ்வித மனக்கோட்டை வேறு, கற்பனை வேறு. கற்பனையிலே கற்பனை செய்பவனே நாயகனாக இருக்க வேண்டுமென்பதில்லை. இன்றிருப்பதைவிட இன்னும் சிறந்த அழகும், இன்பமும், உயர்வும் உலகத்திலே கண்டாகவேண்டுமென்று ஏங்கித் தவிக்கும் கற்பனையையே நான் கருத்திற்கொண்டுள்ளேன். அத்தகைய கற்பனையில்லாதவிடத்து அரிய பெரிய செயல்களைக் காண முடியாது. செயலிலே ஈடுபடுகிறவனுக்கும் கற்பனை இருக்கவேண்டும். கவிஞர்களும் கலைஞர்களும் சிந்தனையாளர்களும் தமது கற்பனைத் திறனால் ஒரு புதிய இன்ப உலகத்தை நமக்குக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் முன்னேற்றம் சாத்தியமாகும்.

கவிஞனை மனத் திடனில்லாதவனென்றோ தன்னம்பிக்கையற்றவனென்றோ கூற முடியாது. "வண்மையில்லையோர் வறுமையின்மையால்........உண்மையில்லை பொய்யுரையிலாமையால்" என்று கற்பனை செய்வதற்கு எவ்வளவு மனத்திடனும் துணிச்சலும் வேண்டும்!

எண்ணிப் பார்த்தால் ஒவ்வொரு மனிதனும் ஒரு வகையில் முயலாக இருப்பான்; வேறொரு வகையில்

ஆமையாகிவிடுவான். எனது நண்பன் வீராசாமி பேசத் தொடங்கினுல் நயாகரா அருவி தோற்றுப் போகும். உலகமே அதிரும்படி அவன் வேகமாகப் பேசுவான்; செய்கைக்கு வரும்போது ஆமையின் வேகத்தை அவனுல் எட்டிப் பிடிக்க முடியாது. அதனுல் நான் அவனை இழிவாகக் கருதுவதில்லை. அவனுடைய பேச்சின் வேகம் ஆயிரம் பேரைச் செயலிலே தூண்டுகிறது. அது பெரிய சாதனையல்லவா?

வேகமாகச் செயலிலே ஈடுபடுகின்றவர்களும் உள்ளத்திலே பதட்டமில்லாது அமைதியாக இருக்க வேண்டும் என்று நமது நூல்கள் கூறுகின்றன. கண் தெறிக்கும் வேகத்திலேயும் ஆழ்ந்த அமைதியைக் காணவேண்டும். முயலுக்குள்ளே ஆமையையும், ஆமைக்குள்ளே முயலையும் கண்டவன் வாழ்க்கையின் இரகசியத்தைக் கண்டவனுகிறுன் என்று கூறும்போது அது ஒரு புதிர்போலத் தோன்றினுலும் உண்மையான வாக்கு. வேகமாகச் சுற்றும் பம்பரம் ஓரிடத்திலே அசையாது நிற்கிறது; 'பம்பரம் தூங்குகிறது' என்று கூறுகிறோம். "அந்தப் பம்பரத்தின் தூக்கம் நமக்கு வாய்க்கவேண்டும். அந்தப் பம்பரத்தைப்போல நாம் சும்மா இருப்பதே சுகம்" என்று ஞானிகள் கூறுகிறுர்கள். அண்டங்களையெல்லாம் படைத்தும் காத்தும் அழித்தும் அளவில்லாத தொழில் புரியும் இறைவன் சாந்திமயமானயோகத்திலிருக்கிறுன். அவனுடைய ஆனந்த நடனம் செயலையும் சாந்தியையும் ஒருங்கே காட்டுகின்றது. வேகத்திற்கும் அதே வேளையில் அமைதிக்கும் அந்த நடனம் சின்னமாக விளங்குகின்றது.

ஆமை முயல் கதையில் தொடங்கி நான் எங்கேயோ பறந்துவிட்டேன். ஆமைபோல அசைவற்றுக் கிடக்க விரும்பும் நான் மனத்திலே எப்படியெல்லாம் வேகமாகப் பறக்க விரும்புகிறேன் என்பதை இதிலிருந்து நீங்கள் கண்டுகொள்ளலாம். ஆனால் தத்துவ விசாரணை செய்வது இங்கு எனது நோக்கமல்ல.

வேகம் மிகுந்த முயலை ஊர்ந்து அசையும் ஆமை வெல்லவேண்டும் என்று உலகம் ஆசைப்படுகிறது. இல்லாவிட்டால் இந்த ஆமை முயல் போட்டிக் கதையிலே மக்களுக்கு நிரந்தரமாக இத்தனை இன்பம் பிறக்காது. ஊர்ந்து செல்லும் பிராணி ஓட்டம் மிகுந்த பிராணியை வெல்லவேண்டும் என்று மக்களின் உள்ளத்திலே பரிவு சுரக்கின்றது. இந்தப் பரிவு நிலைத்திருக்கும் வரையில் மனித இனத்திற்கு உய்வுண்டு என்பது எனது திடமான நம்பிக்கை. ஆமை முயலை வெல்லக்கூட வேண்டாம்; முயலோடு கூடவே செல்லவாவது உதவலாம் என்ற பரிவு எல்லோருடைய உள்ளத்திலும் தழைக்கவேண்டும். அப்பரிவு தழைத்திடும்போது போட்டி தானகவே மறைந்துவிடும். முயல் தன் முதுகிலேயே ஆமையைச் சுமந்து செல்லவும் பரிவோடு முன்வரும்போது போட்டி ஏது? போட்டியில்லாது, அனைவரையும் உடன்கூட்டிச் செல்லவேண்டுமென்ற பரிவுடைய மனப்பான்மை ஓங்கவேண்டும். ஆமை முயல் கதையை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு இந்த ஆசை உண்டாகிறது. ஆமையிடம் மக்கள் காட்டும் பரிவை புணர்ந்து நம்பிக்கையும் கூடவேபிறக்கின்றது.

# காலச் சக்கரம்

காலச் சக்கரம் சுழல்கிறது. ஓயாத சுழற்சி ஓயாத முன்னேற்றம். சக்கரம் உருண்டுகொண்டே இருக்கிறது.

காலச் சக்கரம் என்று சுழல ஆரம்பித்தது? எங்கே தொடங்கியது? எங்கே, எப்பொழுது நிற்கப் போகிறது?—யாரும் திட்டமாகக் கூற முடியாது.

என்றோ அது உருண்டோட ஆரம்பித்தது. எங்கேயோ அது தனது பயணத்தைத் தொடங்கியது; போய்க்கொண்டே இருக்கிறது. ஓய்வில்லை; தயக்கமில்லை; உறக்கமில்லை; பின்நோக்கிப் பார்ப்பதில்லை; ஒரே சீரான ஓட்டம்; ஒரே திசையை நோக்கிப் பிரயாணம்.

காலச் சக்கரத்திற்குப் பின்னோட்டமில்லை; முன்னோட்டமே உண்டு. பின்னோட்டத்தை அது பழகவில்லை. அதை அதற்குப் பழக்குவோரும் இல்லையோ?

எண்ணெய் ஆட்டும் செக்கிலே பூட்டிய மாடு சுற்றிச் சுற்றி ஒரே வட்டத்தில் சுழன்று வந்து கொண்டிருக்கிறது. கிணற்றிலே தண்ணீர் இறைப்பதற்குக் கமலையிலே பூட்டிய மாடு முன்னும் பின்னுமாக ஒரே இடத்தில் போய்க்கொண்டிருக்கிறது. காலச் சக்கரத்தின் போக்கு இவைகளைப் போல அல்ல. அது முன்னேறிக்கொண்டே இருக்கிறது. ஒரு முறை அடியெடுத்து வைத்த பாதையை அது மறுபடியும் கண்ணெடுத்துப் பார்ப்பதே இல்லை.

காலச் சக்கரத்தின் சுழற்சியிலே அதன் அடியிலே வீழ்ந்து எத்தனை எத்தனை உயிர்கள் அழிந்துவிட்டன! எத்தனை எத்தனை நாகரிகங்கள் நசுங்கிவிட்டன! எத்தனை எத்தனை கலைகள், எத்தனை எத்தனை சாஸ்திரங்கள், எத்தனை எத்தனை காவியங்கள் மறைந்து விட்டன!

காலச் சக்கரத்தில் சிக்காத கலை இல்லை; கவிதை இல்லை; சமூகமில்லை; நாகரிகமில்லை. உளுத்துப் போனவையெல்லாம், வலுவற்றவையெல்லாம் அதன் அடியிலே நொறுங்கிப் போகும்; மங்காத ஜீவனுள்ளவை உரம் பெற்று நிமிர்ந்தோங்கும்; காலச் சக்கரத்தையே அனுயாசமாகச் சிங்க நோக்கு நோக்கி நிற்கும்.

காலச் சக்கரம் அதைப் பொருட்படுத்துவதில்லை. காலில் விழுந்து நொறுங்குவதும், காலுக்கு அகப்படாது தலை நிமிர்ந்து நிற்பதும் அதற்கு ஒன்றுதான். அவை இரண்டையும் ஒரே நோக்கோடு பார்த்துக் கொண்டு காலச்சக்கரம் போகிறது. கண்ணை மூடிக் கொண்டு போகிறது என்றுகூடச் சொல்லலாம்.

காலச் சக்கரம் சிறந்த நீதிபதி; தாட்சண்ணியமற்றது; விருப்புவெறுப்பற்றது. உண்மையான தீர்ப்பே அதன் ஓட்டம்.

காலச் சக்கரம் எத்தனை வாழ்வைப் பார்த்திருக்கிறது! எத்தனை போரைப் பார்த்திருக்கிறது! அவற்றிற்கெல்லாம் அது மோனச் சான்று. வாழ்வின் இன்பத் துளிகளையும், போரின் துன்பக் கண்ணீரையும் அது ஒரே மனப்பாங்குடன் ஏற்றுக்கொண்டு

உருளுகின்றது. அதன் உள்ளத்திலே கருணையில்லையா? உணர்ச்சியே இல்லையா? அதன் உள்ளம் வெறும் கருங்கல்லா?

காதலின் உயர்வைக் காலச் சக்கரம் பார்த்திருக்கிறது; காமத்தின் இழிவையும் அது பார்த்திருக்கிறது. இராவணனுடைய காமத்தீ அரக்கர் குலத்தைச் சுட்டெரித்தது காலச் சக்கரத்திற்குத் தெரியும்; ஷாஜஹானின் உயிர்க் காதல் கலைமணியான தாஜ்மஹாலாக வடிவம் பெற்றதும் அதற்குத் தெரியும். அன்பு, கருணை முதலிய உயர்ந்த உணர்ச்சிகளின் அருஞ்செயல், பொறுமை, கோபம் முதலிய இழிந்த உணர்ச்சிகளின் கொடுமை ஆகிய அனைத்தையும் காலச் சக்கரம் கண்டிருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அது மௌனமாகப் போய்க்கொண்டே இருக்கிறது. அதன் மௌனத்தின் பொருளைக் காண்பவர்கள் அருமையிலும் அருமை. அப்படிக் காண்பவர்களே பாக்கியவான்கள். அவர்களுக்கே காலச் சக்கரம் வந்த வழி தோன்றுகிறது, அது செல்லும் பாதையும் தோன்றுகிறது. காலச் சக்கரத்தில் கட்டுண்ணாமல் தனித்து அப்பால் நின்று சிருஷ்டியின் விளையாட்டைப் பார்க்க அவர்களுக்கே இயலும். மற்றவர்களெல்லாம் காலச் சககரத்தில் கட்டுண்டவர்களே.

காலச் சக்கரம் என்று தேய்ந்து விழும்? அதன் ஓட்டம் என்று ஓயும்? கற்பனை செய்யவே முடியவில்லை. அதன் ஆரக்கால்களின் ஆணிக் குமிழ்களே இன்னும் தேயவில்லை. அப்படியிருக்கக் காலச்சக்கரம் எப்பொழுது தேயப் போகிறது? அது தேயவே

தேயாதா? அதன் வட்டைக்குத் தேய்வென்பதே இல்லையா?

நாழிகை அழியும்; நாள் அழியும்; கோள் அழியும். ஆனால் காலச் சக்கரம் அழியாது.

காலச் சக்கரம் அழியாதென்றால் அது கடவுளோடு ஒன்றா? கடவுள் ஒருவர்தானே அழிவற்றவர்? காலச் சக்கரமும் கடவுளும் ஒன்றா? இல்லை இல்லை. காலச் சக்கரம் கடவுளின் ஊர்தி. அவர் காலத்தை வென்றவர்; காலத்துக்குக் காலன். அவர் அதிலேறிப் படைப்பு விளையாட்டில் மகிழலாம்; அதையே அழித்துவிட்டு ஆழ்ந்த அமைதியில் சாந்தி பெற்றிருக்கலாம். அவரை அடைந்த அன்பர்களும் அவ்வாறிருக்கலாம்.

# உள்ளத்தின் விரிவு

நிலைமைக்குத் தக்கவாறு உள்ளம் விரிவடைய வேண்டும். இல்லாவிட்டால் மனித இனம் நிலை பெற்று வாழ முடியாது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சில விநோதமான உயிர்ப் பிராணிகள் இந்த உலகத்திலே வாழ்ந்து வந்தன. மாறுகின்ற உலக நிலைமைக்கு ஏற்றவாறு அவைகளால் தம்மை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாமற் போனதால் அவை பூண்டோடு அழிந்து போயின. மண்ணிற் புதைந்து கிடந்த அவற்றின் எலும்புக் கூடுகள் சிலவற்றைக் கண்ட பிறகே அவ்வாறான உயிரினங்கள் இருந்தனவென்று மனிதனுக்குத் தெரியவந்தது.

அந்தப் பிராணிகளுக்கு ஏற்பட்ட கதி அவற்றிற்கு மட்டும் தனிப்பட்டதல்ல. அது பொதுவான நியதி. நிலைமைக்கு ஏற்றவாறு தம்மை அமைத்துக் கொள்ளத் தெரியாத எல்லா உயிரினங்களுக்கும் அதே கதிதான் நேரும்; மனிதனும் இந்த நியதிக்கு விலக்கல்ல.

இது அணுகுண்டு யுகம். அணுகுண்டையும் பின்னால் தள்ளிவிட்டு ஹைடிரஜன் குண்டு தோன்றியிருக்கிறது. அதைவிடக் கொடிய படைகளையும் உண்டாக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையிலே மனிதன் பழைய பத்தாம்பசலியாக இருக்க முடியாது. அவன் உள்ளம் புதிய நிலைமையைச் சமாளிக்கக்கூடிய வகையில் மாறவேண்டும்.

அணுகுண்டு யுகத்திலே போர் ஏற்படுமானல் மானிட சாதியே அழிந்து போகும். இரண்டாம் உலக யுத்தத்திலே மாண்டு போன மக்களைவிட அதிகம் பேரை இன்று ஒரே நாளில் வீட்டிலிருந்தபடியே அணுகுண்டை ஏவி மடித்துவிடலாம்; பெரிய பெரிய நகரங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்படி ஒரு நாழிகையிலே செய்துவிடலாம். வல்லரசுகளின் கையிலே இன்றைக்கிருக்கிற அணுப்படைகளே உலகத்தைத் தூளாக்கப் போதும். அதனல்தான் இனிமேல் போர் ஏற்படக்கூடாது என்கிறேன்.

போரை ஒழிப்பதற்கு என்ன செய்யவேண்டும்? அதற்குத்தான் நமது உள்ளம் மாறவேண்டும், விரியவேண்டும், புதிய நிலைமைக்கு ஏற்றவாறு அமையவேண்டும்.

உள்ளம் மாறவேண்டும் என்று கூறுவதைவிட உள்ளம் விரியவேண்டும் என்று கூறுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஆதி மனிதன் பெரும்பாலும் விலங்குகளைப் போலத் தன்னைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். தனது இன்பம், தனது வயிறு—இவற்றிலேயே அவனுக்கு நாட்டம். ஆனல் நாளடைவிலே அவனுடைய எண்ணம் கொஞ்சங் கொஞ்சமாக விரியத் தொடங்கியது. மனைவி, மக்கள், குடும்பம்,

கூட்டம், ஊர், நாடு என்றிப்படி அவன் எண்ண மிடத் தொடங்கினன். அவனுடைய உள்ளம் அந்த அளவுக்கு விரிந்து கொண்டே வந்தது. மனிதன் தான் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்று போற்றத் தொடங்கினன். அங்கு வாழ்பவர்களெல்லாம் தன்னுடன் பிறந்தோர் என்று பேசிப் பெருமை கொண்டான். அவர்கள் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று ஆசை கொண்டான். அவர்களுக் காகத் தேவைப்படும்போது தன்னையும் தியாகஞ் செய்ய மார் தட்டி முன் வந்தான். மனிதனுடைய உள்ளத்தின் விரிவு இன்று பெரும்பாலும் நாட் டோடு நின்றிருக்கிறது என்று கூறலாம்.

அணுகுண்டு யுகத்திலே அப்படி நாட்டோடு உள்ளத்தின் விரிவு நின்றுவிடுவது சரிப்படாது. மானிட சாதி அழியாது நிலைக்க வேண்டுமானல் மேலும் உள்ளம் விரியவேண்டும். உலகமே ஒரு குடும்பம், உலக மக்கள் எல்லோரும் உடன் பிறந்தவர்கள் என்கிற எண்ணம் உண்டாக வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உணர்ச்சி நிலைபெறவேண்டும். யாரோ சில கவிஞர் கள் அல்லது சான்ருேர்கள் மட்டும் அப்படி நினைத் தால் போதாது; மனித இனமே அப்படி நினைக்க வேண்டும்.

அதற்கு முதற்படியாக எல்லா மக்களும் சுதந்தரமாக வாழ்ந்து தங்கள் திறமைகளை வளர்க்க வசதி செய்யவேண்டும்; அடிமை நாடு, ஆளும் நாடு என்ற பிரிவே இருக்கக்கூடாது. நிறம், மதம், சாதி என்ற வகையிலே பிரிவினைகளும் ஏற்றத்தாழ்வு

களும் முற்றிலும் மறையவேண்டும். உலகத்தின் ஒரு மூலையிலே ஒருவனுக்குத் துன்பமேற்பட்டால் மற்றொரு மூலையிலே இருப்பவனுக்கு இயல்பாகவே பரிவு ஏற்படவேண்டும். 'என்னைப்போன்ற ஒருவன் என்னுடன் பிறந்தவன் அங்கே துன்புறுகிறானே, அந்தத் துன்பத்தை நீக்க நான் வழி காணவேண்டும்' என்ற எண்ணம் இயல்பாக உண்டாகுமாறு மனிதனுடைய உள்ளம் விரிவடைய வேண்டும்.

இது ஒன்றே மானிட சாதியை இன்று அழியாது காக்கக்கூடிய சக்தியாகும். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று இராமலிங்க சுவாமிகள் மனமுருகிப் பாடினார். பயிர் வாடுவதைக் கண்டால் அவருடைய உள்ளம் வாடிற்று. ஒரு மண் கட்டியின் உருவத்தை யாராவது காலால் மிதித்துச் சிதைத்துவிட்டால் அதைக்கூட அவரால் சகிக்க முடியவில்லையாம். அப்படி அந்த அடிகளாருடைய உள்ளம் விரிவடைந்து பயிர்களுக்கும், உயிரே இல்லாத மண்கட்டிக்கும் பரிவு காட்டியது.

மனித உள்ளம் எந்தப் பேரெல்லைக்கு விரியக் கூடும் என்பதைச் சான்றோர்களின் வாழ்க்கையிலிருந்து அறிகிறோம். அந்த அளவு ஒவ்வொரு மனிதனுக்கும் எட்டாததாக இருந்தாலும் மனித இனத்தை வேறுபாடின்றி நேசிக்கும் அளவுக்கு அவன் போகலாம். போகவேண்டிய நெருக்கடி இன்று ஏற்பட்டிருக்கிறது. மனிதன் இந்த நிலையிலே எப்படித் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளுகிறானோ அதைப் பொறுத்திருக்கிறது அவனுடைய இனத்தின் எதிர்காலம்.

# முருங்கைமர வேதாளம்

விக்கிரமாதித்தன் கதை என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அதை முப்பத்திரண்டு பதுமைக் கதை என்றும் சொல்லுவார்கள். விக்கிரமாதித்தன் வீற்றிருந்த உயர்ந்த அரியணையின் படிகளிலே முப்பத்திரண்டு அழகான கன்னிப் பதுமைகள் இருந்தனவாம். பிற்காலத்திலே போஜன் என்னும் பேரரசனுக்கு இந்த அரியணை ஒரு கம்புக் கொல்லையி லிருந்து கிடைத்ததாம். அவன் பெரிதும் மகிழ்ச்சி யடைந்து, அதைத் தனது அரியணையாகக் கொள்ளக் கருதினன். தனது கொலுமண்டபத்திலே அதை அமைத்து மங்களமான ஒரு நல்வேளையிலே அதில் அமர நினைத்து முதற்படியில் காலெடுத்து வைத்த போது அந்த முப்பத்திரண்டு பதுமைகளும் கலீரென்று நகைத்தனவாம். போஜன் திடுக்கிட்டு நின்று அந்தப் பதுமைகளைப் பார்த்து அவைகளின் சிரிப்புக்குக் காரணமென்னவென்று கேட்டான். அப்பொழுது ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு பதுமையாக விக்கிரமாதித்தனுடைய உயர்ந்த பண்புகளையும் அறிவு நுட்பத்தையும் எடுத்துக் கூறிற்றும்.

பதுமைகள் கூறிய கதைகளிலே விக்கிரமாதித்த னுடைய அறிவு நுட்பத்தைச் சோதித்த வேதாளம் ஒன்று கேட்ட சிக்கலான கேள்விகளும் அவற்றிற்கு விக்கிரமாதித்தன் அளித்த விடைகளும் அடங்கி

யிருக்கின்றன. ஒரு முனிவருடைய வேண்டுகோளின் படி விக்கிரமாதித்தன் முருங்கை மரமொன்றில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த அந்த வேதாளத்தைக் கட்டித் தூக்கிக்கொண்டு வருவானும். வேதாளம் ஒரு சிக்கலான புதிர்க்கதை யொன்றைச் சொல்லி அதை விடுவிக்கும்படி அவனிடம் கேட்குமாம். அவன் தகுந்த விடை கூறுவதைக் கேட்டுக் கொண்டே அந்த வேதாளம் எப்படியோ தந்திரமாகக் கட்டவிழ்த்துக்கொண்டு ஓடிப் போய் முன்னிருந்தவாறே முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ளுமாம். இந்தக் கதையிலிருந்துதான், "பழையபடி வேதாளம் முருக்கமர மேறிக் கொண்டது" என்ற வாக்கியம் தோன்றியிருக்கிறது. பொதுவாக அனைவருக்கும் ஒவ்வாத ஏதாவதொரு எண்ணத்தையோ செயலையோ மறுபடியும் மறு படியும் விடாது கடைப்பிடிக்கிறவனைப் பார்த்து அப்படிச் சொல்வதுண்டு.

விக்கிரமாதித்தன் பிடித்துவர முயன்ற வேதா ளத்தைப் போல எத்தனையோ வேதாளங்கள் இன்றும் இருக்கின்றன. மனிதன் அவற்றைக் கட்டிப் பிடித்து அடக்க எவ்வளவு முயன்றாலும், கொஞ்சம் ஏமாந்தால் அவை தப்பித்துக்கொண்டு போய் விடும்; பழையபடி முருக்க மரம் ஏறிக்கொள்ளும்.

இந்த வேதாளங்கள் வேறெங்குமில்லை. மனித னுடைய உள்ளத்துக்குள்ளேயே இருக்கின்றன. மனிதன் தன்னுடைய நல்லுணர்வினாலே அவற்றைக் கட்டிப்பிடித்து அடக்கி ஆள முயல்கிறான்; ஆனால் அவனுடைய பிடி பல சமயங்களில் தளர்ந்து

போகிறது; அந்தச் சமயம் பார்த்து வேதாளங்கள் யதேச்சையடைந்து மனிதனுடைய தலைமேலேறிக் கொண்டு கூத்தாடத் தொடங்கிவிடுகின்றன.

தன்னலம் என்கிற வேதாளந்தான் இந்தக் கூட்டத்திற்கே தலைமை வகிப்பது. அதனுடைய ஆதிக்கத்தினாலே மனிதன் படுகின்ற தொல்லைகள் கொஞ்சமல்ல. மனிதனுடைய தொல்லைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் அதனுடைய வேலை தான் என்றுகூடச் சொல்லலாம். அந்த தன்னல வேதாளத்திற்குப் பக்கபலமாக இருப்பவைகள் போர், பகைமை, வெறுப்பு, பொறாமை முதலிய வேதாளங்கள். இவற்றைத் தன்னலத்தின் குழந்தைகள் என்றே சொல்லவேண்டும். மனிதன் இவைகளுக்கு இடங்கொடுப்பதாலேயே உலகத்தில் துன்பம் இன்னும் நிலவிக் கொண்டிருக்கிறது.

உலகத்திலே பல பெரிய மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் மனித சாதியின் நன்மைக்காகப் பல அரிய உபதேசங்களை அருளியிருக்கிறார்கள். அன்பு, சத்தியம், அஹிம்சை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்வோமானால் உலகத்தில் துன்பமே இராது. உலகம் கந்தர்வ லோகம் போல இன்ப நாடாகிவிடும் என்று அவர்கள் நமக்கு நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். புத்தர், இயேசு கிறிஸ்து, காந்தியடிகள், அப்பர் சுவாமிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், இராமலிங்க சுவாமிகள் முதலியோர், "ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செயல் வேண்டும், அன்பு செயல் வேண்டும்" என்று வற்புறுத்தி முழங்கியிருக்கிறார்கள். "அன்பே இறை

வனின் வடிவம்; அன்பின் மூலமாகவே இறைவனை எளிதில் அடையலாம்'' என்று நாயன்மார்களும், ஆழ்வார்களும் போதித்திருக்கிறார்கள். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர். 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றார் திருவள்ளுவர். அன்பு, வாய்மை, கொல்லாமை ஆகியவற்றோடு அருளுடைமை இன்னா செய்யாமை என்பவற்றின் பெருமையையும் திருவள்ளுவர் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். இவற்றைப் பற்றிய ஐந்து அதிகாரங்களே உலகத்தின் பொது மறையாகத் திகழ்வதற்குப் போதுமானவை. உலகத்தை இன்ப வீடாக்குவதற்கு வள்ளுவம் இவற்றின் மூலம் தெளிவாக வழி வகுத்துள்ளது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உள்ளப் பான்மையோடு வாழ்ந்தால் கவலையற்ற வாழ்வு கிடைக்கும் என்று சங்க காலத்துக் கவிஞர் குறிப்பாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மனிதனுடைய உள்ளம் உயர்வடைகிறது. தன்னலம் முதலான வேதாளங்களைக் கட்டிப்பிடித்து அடக்கியொடுக்க வேண்டுமென்ற உணர்வு பிறக்கின்றது. போர் வேண்டாம், அனைவரும் உடன்பிறந்தார் போல வாழலாம் என்ற ஆர்வம் உண்டாகிறது. ஆனால் மனிதன் எப்பொழுதுமே எச்சரிக்கையாக இருப்பதில்லை. தனது பிடியைத் தளர்த்திவிடுகிறான். அவனுடைய அறிவு கொஞ்சம் உறங்கி விடுகிறது. வேதாளங்கள் பழையபடி முருக்க மரத்தின்மேல் ஏறிக்கொள்ளுகின்றன.

சாதி, சமயம், நாடு, நிறம் என்றெல்லா எத்தனை எத்தனையோ குறுகிய வரம்பிட்டு மானி சாதி சிதறுண்டு தன்னல ஆதிக்கத்தால் மயங் விடுகின்றது. அம்மயக்கத்தின் விளைவாகப் போ தாண்டவமாடுகின்றது; துன்பம் தலை விரித்தா கின்றது. மனிதன் விலங்காகிவிடுகிறான். அ னுடைய அன்பு, இரக்கம், அருள் போன்ற மென்மை உணர்ச்சிகள் மறைந்து விலங்கு உணர்ச்சிகள் மேலோங்கிவிடுகின்றன. அவன் கீழ்த்தர விலங்கி லிருந்து பரிணாமக்கிரமத்திலே தோன்றியவன் என் பதற்கு அத்தாட்சியாக அவனுக்கு, உருவம் வேறு பட்டிருந்தாலும், இன்னும் விலங்குக் குணங்கள் இருக்கின்றன என்று காண்பிப்பதுபோல அந்த உணர்ச்சிகள் ஆதிக்கம் பெற்று அவனை விலங் காக்கிப் பேயாட்டம் ஆடுகின்றன.

உலகமே நடுங்கும்படியாக ஒரு பெரும்போர் 1914–ஆம் ஆண்டில் தொடங்கியது. அதனால் உண் டான துன்பங்களைக் கண்டபோது, 'இனிப் போரே வேண்டாம்; போர் ஒழிக' என்று மனிதன் முழங்கி னான். ஆனால் அந்த நல்லெண்ணம் நெடுநாள் நீடித் திருக்கவில்லை. மனிதன் அதனை மறந்துவிட்டான். மறுபடியும் ஒரு பெரும்போர் முன்னைவிடக் கொடுமை நிறைந்ததாகத் தோன்றி உலகத்தை ஆட்டியது. அழிவுப் படைகள் பயங்கரமாகப் பெருகின. உலகத்தையே அழிக்கக்கூடிய வல்லமை யோடு அணுப்படையும் ஹைடிரஜன் படையும் தோன்றிவிட்டன. இனிமேல் போர் வந்தால் உலகமே அழிந்து போகும். மனித வருக்கமே

வேரற்றுப் போகும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த நிலையிலும் மனிதன் விழித்துக் கொள்ளா விட்டால் அவனுக்கு உய்வில்லை. மனிதன் தனது அறிவின் திறத்தைப் பற்றிப் பெருமைப்படுகிறான்; அவன் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டு கருவங் கொள்ளுகிறான். ஆனால் உண்மையான முன்னேற்றம் மனிதனுடைய விலங்குணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இருக்கின்றது. விலங்குணர்ச்சி களைத் தேவ உணர்ச்சிகளாக மாற்றவேண்டும். அன்பு, அருள் ஆகிய மென்மை யுணர்ச்சிகள் ஆட்சி புரியவேண்டும். அதுவே நிலையான இன்பத்திற்கு வழி கோலும் முன்னேற்றம்.

அணுப் படையின் வலிமையைப் பெருக்கிக் கொண்டே போனால் மனித சாதிக்கு முடிவு ஏற்பட்டு விடும் என்று சிறந்த சிந்தனையாளர் பலர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அதை நினைத் தாவது மனிதன் விழிப்படைய வேண்டும்; தன்னலம் முதலிய வேதாளங்களைக் கட்டிப்பிடித்து அடக்கி ஆள வேண்டும். விக்கிரமாதித்தனைப் போல அந்த முயற்சியிலே விடாப்பிடியாக நிற்க வேண்டும். விக்கிரமாதித்தன் தனது திறமையாலும் முயற்சி யாலும் விக்கிரம சகாப்தம் என்ற ஒரு புதிய சகாப்தத்தையே உண்டு பண்ணககூடிய தகுதி பெற்றான். நாமும் நமது உயர்ந்த உணர்ச்சிகளை மேலோங்கி நிற்கச் செய்யும் முயற்சியில் வெற்றி. பெற்றால் இன்ப வாழ்க்கையாகிய புதிய சகாப் தத்தை உலகம் முழுவதிலும் தோற்றுவிக்க முடியும்.

# முரண்பாடுகள்

“ இந்த உலகம் எல்லா நலன்களையும் பெற்று இன்பமாக இருக்கவேணும்; அதுதான் என்னுடைய ஆசை” என்றார் ஒரு பெரியவர்.

“ எதற்காக உலகம் நலமாக இருக்கவேணும்? எல்லா நலன்களும் கிடைத்து இன்பத்தோடிருந்தால் மனிதன் விலங்காகிவிட மாட்டானா?” என்று பதட்டத்தோடு ஒரு வழுக்கைத் தலையர் கேட்டார்.

தாம் கூறிய இந்தக் கருத்திற்காவது எதிர்ப்போ மாறுபாடோ இராது என்று பெரியவர் எதிர்பார்த்திருந்தார். இதிலும் அவர் ஏமாற்றமடைய நேரிட்டது.

இன்றைய உலகம் முரண்பாடுகள் நிறைந்தது; முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களிலே நம்பிக்கை கொண்டது. எதை ஒரு பகுதி வேண்டும் என்கிறதோ அதையே மற்றொரு பகுதி வேண்டவே வேண்டாம் என்கிறது. படை வலிமையைப் பெருக்குவதின் மூலமே உலகத்தில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பது இன்றைய உலகத்தில் உலவி வரும் ஒரு கருத்து. படைகளையெல்லாம் கடலிலே தூக்கி எறிந்துவிட்டு அஹிம்சை வழியைப் பின்பற்றினால் தான் உலகத்தில் போரின்றி அமைதி நிலவும் என்பது அதற்கு நேர்மாறாக உலவிவரும் மற்றொரு கருத்து.

இரண்டு கருத்துக்களையும் தனித்தனியே ஆமோதிக்கின்றவர்களும், வற்புறுத்துகின்றவர்களும் எங்குமிருக்கிறார்கள். அதேபோல முதலாளித்துவம் பொதுவுடைமை, குடியரசு சர்வாதிகாரம், விடுதலை கட்டுப்பாடு என்று இப்படிப்பட்ட முரண்பட்ட கொள்கைகளையும் அவற்றிற்குத் தனித்தனியேயுள்ள வெறிமிகுந்த ஆதரவுகளையும் எடுத்துக் கூறிக் கொண்டே போகலாம்.

திரைப்படத் தணிக்கையைப்பற்றி நேற்று மாலை நடந்த ஒரு கூட்டத்திற்கு நான் தற்செயலாகப் போக நேர்ந்தது. திரைப்படக் கலை நல்ல முறையில் வளருவதற்குத் தணிக்கை மிகவும் தேவை என்று ஒரு கட்சி அழுத்தம் திருத்தமாகப் பேசிற்று; இக்கலை வளர வேண்டுமானால் தணிக்கை அறவே கூடாது என்று மற்றொரு கட்சி வன்மையாக வற்புறுத்தியது. இந்தக் கருத்து வேறுபாட்டில் மாட்டிக்கொள்ளக் கூடாதென்று நான் மெதுவாக அங்கிருந்து நழுவி அமைதியை நாடிக் கடற்கரைக்குச் சென்று ஓரிடத்தில் அமர்ந்தேன். மணல்வெளி அசைவற்று அமைதியாக இருந்தது. கடல் அலைகள் ஓய்வின்றி உருண்டு சுருண்டு தரையில் மோதின. நிலத்திற்கும் கடலுக்குமுள்ள முரண்பாட்டைக் கவனிப்பதற்கு முன்பே அருகில் அமர்ந்திருந்த சில இளைஞர்களின் முழக்கம் என் சிந்தனையை வேறெங்கும் செல்லவிடாது தாக்கியது. "பாரத நாடு உலகிற்குத் தந்துள்ள தத்துவ ஞானத்திற்கு இணையே கிடையாது. அதை நான் இமயமலையின் உச்சியிலிருந்து முழங்கவும் பின் வாங்கமாட்டேன்" என்று முழங்கினான் ஒருவன்.

"என்னடா, உங்கள் தத்துவம்? அதை நம்பி நம்பித் தான் இந்த நாடு கெட்டுக் குட்டிச் சுவராயிற்று. கிடைத்த சுதந்திரத்தைக் காக்க இனிமேலாவது அதையெல்லாம் நெருப்பிலே போட்டுவிட்டு மேல் நாடுகளின் வழியைப் பின்பற்ற வேண்டும்" என்று மற்ருெருவன் இடியிடித்தான். நான் சட்டென்று எழுந்து வீட்டை நோக்கி ஓடினேன். "ஏண்டா உனக்காக எத்தனே நேரம் காத்திருப்பது? உன்னிடத்திலே ஒரு விஷயத்தைப்பற்றி விவாதித்து முடிவு கட்டலாமென்று ஐந்து மணிக்கே வந்தேன்" என்று என் நண்பன் அறைக்குள்ளிருந்தவாறே வரவேற்ருன். "விவாதமா? என்ன விஷயம்?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டேன். "கவிதைக்கு யாப்பு முதலிய வரம்புகளும் கட்டுப்பாடுகளும் இருக்கக் கூடாது என்பது என்னுடைய கட்சி. நீ அதற்கு மாருன கருத்தைத் தெரிவித்ததாகக் கேள்விப் பட்டேன். அதைப் பற்றித்தான் இப்பொழுது விவாதிக்க வேண்டும்" என்ருன் நண்பன். எங்கு சென்ருலும் இவற்றிற்குத் தப்ப முடியாது என்று எனக்கு அப்பொழுதுதான் விளங்கிற்று.

எனக்கு இந்த மாறுபாடுகளேப்பற்றி அச்சமோ, வெறுப்போ கிடையாது. ஓரளவுக்கு அவற்றை நான் பாராட்டுகிறேன். அவற்றினுல்தான் உலகம் சுவையுடையதாகத் தோன்றுகிறது. இந்த மாறுபாடுகளே வாழ்க்கைக்கு உப்பு. இவையில்லாவிடில் வாழ்க்கை சப்பையாகப் போய்விடும்.

ஆனுல் உப்பு அளவுக்கு மீறினுல் எல்லாம் கெட்டுப் போகும். சுவை கொடுக்கும் உப்பே உண்டி

முழுவதையும் பயனற்றதாகச் செய்துவிடும். இந்த உண்மையை எப்பொழுதும் உள்ளத்தில் கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

உண்மையையும் பொதுநலத்தையும் உறுதியான அடிநிலையாகக் கொண்ட எந்த மாறுபட்ட கருத்துக்களையும் பரிவோடு பார்க்கவேண்டும். தன் கொள்கைதான் நூற்றுக்கு நூறு சரியானது; வேறொன்றிலும் உண்மையே இருக்க முடியாது என்ற குருட்டுப் பிடியே தொல்லைகளை விளைவிக்கின்றது. வடிவ கணிதத்திலே மறுக்க முடியாத பல உண்மைகள் வெளியிடப்படுகின்றன. அவற்றிற்குத் தேற்றங்கள் என்று பெயர். சில தேற்றங்கள் எவ்வளவு உண்மையோ அவ்வளவு அவற்றின் மறுதலைகளும் உண்மையாக இருக்கும். எடுத்துக் காட்டாக எளிமையான வடிவ கணித உண்மை ஒன்றை நோக்குவோம்.

ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தால் அதன் கோணங்களும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும். இது தேற்றம். இதன் மறுதலையாவது: ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தால் அதன் பக்கங்களும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும். இதுவும் உண்மைதான்.

கருத்துக்களிலும் பல சமயங்களில் இந்த உண்மையைக் காணலாம். முரண்பட்ட கருத்துக்களிலேயும் உண்மை பதுங்கியிருப்பதை உணரலாம்.

நேர்மையோடும், பொதுநல நோக்கோடும், பரந்த மனப்பான்மையோடும் கருத்துக்களையும் பிரச்சினை களையும் ஆராயும் திறமையை அனைவரும் பெற்று விட்டால் இந்த முரண்பாடுகளால் தீங்கே விளைய முடியாது. ஆனால் ஒவ்வொருவனுக்கும் தன்னைப் பற்றி நம்பிக்கையிருக்கிறது; மற்றவர்களைப்பற்றி ஐயமும் அவநம்பிக்கையும் அச்சமும் முன்னால் நின்று தெளிந்த பார்வையைத் தடுத்துக் கண்ணை மறைக் கின்றன. அதனால் ஒவ்வொருவனும் தன்னுடைய கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுவதையும் செயல் முறையில் நிறைவேற்றுவதையும் பின்னணி யில் வைத்து மற்றவர்களின் நோக்கத்தைப்பற்றி உலகத்திலே அச்சத்தையும் பகைமையையும் வளர்ப் பதையே முதன்மையாகக் கருதத் தொடங்குகிறான். இவ்வாறு அனைவரும் முனைவதினாலே அதுவே நாளடைவில் ஒரு வெறியாகிவிடுகிறது; உண்மை ஆழத்தில் புதைந்து மறைந்துவிடுகிறது.

உலக யுத்தத்தின்போது சிறைப்பட்ட சில ஜெர்மானிய வீரர்களைப் பார்த்து நேசக் கட்சி வீரர்களில் பலர் ஆச்சரியப்பட்டார்களாம். எதனால் ஆச்சரியம் தெரியுமா? ஜெர்மானியரை அவர்கள் மனிதர்களாகப் பார்த்துத்தான் இப்படி ஆச்சரியம். அருகிலே பார்க்கும் வரையில் அவர்களை மனிதத் தன்மையற்ற அரக்கர்களாகவே அவர்கள் எண்ணி யிருந்தார்கள். அப்படித்தான் அவர்களுக்கு எடுத் துக் கூறி வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு மக்கள் தாமே கற்பனை செய்து கொண்ட பூதங்களினால் அல்லல்படுகிறார்கள்.

எல்லா மக்களும் இன்பமெய்தி வாழவேண்டும் என்ற எண்ணம் உண்மையாக இருக்குமானால் முரண்பட்ட கொள்கைகளைப் பற்றி அஞ்சவேண்டியதில்லை. ஒரே சிகரத்தை நாடி இருவர் வேறு வேறான இரண்டு கோடிகளிலிருந்து புறப்படலாம். குறிக்கோள் ஒன்றாக இருக்கும் வரையில் அவர்கள் பகைமை கொள்ள வேண்டியதில்லை. உள்ளத்திலே நேர்மையும் பரிவும் இருந்தால் மனித சாதியின் நலத்தை நாடுவோர் தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு அவற்றால் புதிய வலிமை பெற்றுத் தமது இலட்சியத்தில் வெற்றியடைய முன்னேறலாம் பிறருடைய அனுபவத்தில் உள்ள நல்ல பகுதிகளை ஏற்றுக்கொள்வதிலே சிறிதும் தயக்கமோ ஐயமோ வேண்டுவதில்லை. அறிவு வாய்ந்த மனிதனுக்கு இந்தத் துணிச்சல் வேண்டும். இதுவே சமுதாயத்தை நிலைபெறச் செய்வதற்கு இன்று முக்கியமானதாகும்.

# குழலோசை

மார்கழித் திங்களில் அதிகாலையில் பூவின்மேல் பனி விழுகின்ற அரவத்தைக் கேட்டிருக்கிறீர்களா? உருவமில்லாத பனித்திவலை காற்று வெளியிலே மிதந்து வந்து இதழ் அவிழ்ந்து கொண்டிருக்கும் பூவின்மேலே படிந்து மெல்ல மெல்ல முத்துச் சொட்டாக உருவங்கொள்ளும் ஆச்சரியத்தைக் கண்டு களிக்க நான் கழனிகளினூடே நடந்து கொண்டிருந்தேன்.

கிழக்கு மங்கலாக வெளுத்திருக்கிறது. பரிதியின் ஒளி தோன்றப் போகிறது என்பதற்கு அறிகுறியாக இப்பொழுதுதான் அடிவானத்திலே ஒன்றிரண்டு வெள்ளை ரேகைகள் படர்ந்திருக்கின்றன. மார்கழி இறுதி வாரத்திலே ஒரு நாள்.

விரிந்த மலரின் இதழ்களின் மேலே பனி விழுகிறது. அரவமில்லாத அரவமொன்று தொனிக்கிறது. பனி மிதந்து வருகிறது; இதழ்கள் அதை ஏந்துகின்றன. மலரின் உள்ளத்திலே கிளர்ந்த அழகும் இன்பமும் மேலே பொங்குவது போலப் பனிநீர் மலர் இதழ்களிலே வடிவங் கொள்ளுகிறது. நெஞ்சிலே காதல் அரும்புவது போலே, விண்ணிலிருந்து கருணை வெள்ளம் இழிவது போலே.

உருவில்லாத நுண்ணிய திவலைகளாகக் காற்றிலே மிதந்து வந்து இதழ்களிலே படிந்த பனி

மெதுவாக ஒருங்கு திரண்டு நீர்த்துளியாக உரு வெடுக்கிறது. உருண்டு திரண்டு முத்துச் சொட்டாக இதழ்களின் நுனியிலே இளமங்கையின் வதனத்திற்கு எழில் தரும் எள்ளின் பூவையொத்த நாசியில் தொங்கி அசையும் முத்துப் புலாக்கைப் போல ஒரு கணம் நிற்கிறது. நீர்த்துளியின் சுமை தாங்காது மெல்லிய இதழ் தலை சாய்கிறது; முத்துச்சொட்டு நிலத்திலே குதிக்கிறது. மரங்களின் இலைகளிலிருந்தும் நூற்றுக்கணக்காகப் பனிச் சொட்டுக்கள் முத்து முத்தாகக் குதிக்கின்றன.

என் உடம்பெல்லாம் ஒரு ஜிலுஜிலுப்பு ஏறுகின்றது. பனித் திவலையின் இந்த ஜிலுஜிலுப்பிலே ஒரு தனிப்பட்ட இன்பக் கிளர்ச்சியுண்டாகிறது. மார்கழித் திங்களிலே அதிகாலையிலே இறைவனுடைய புகழைப் பாடி பஜனை செய்து கொண்டு தெருக்களிலே வலம் வரவேண்டுமென்று முதலில் ஏற்பாடு செய்தவர்கள் இந்த இன்பத்தை நன்கு அறிந்திருக்க வேண்டும். இழுத்துப் போர்த்துக் கொண்டு வீட்டிற்குள்ளே முடங்கிக் கிடப்பவர்கள் இந்த இன்பத்தைத் துய்க்க முடியாது.

நான் கழனிகளின் வழியே மெதுவாக நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று புல்லாங்குழலின் நாதம் செவிகளிலே பாய்ந்தது. திட்டமான உருவம் பெறாத ஏதோ ஒரு நாடோடிப் பாடலின் மெட்டு அது. கலைப் பண்பில்லாத உள்ளக் கிளர்ச்சியின் எதிரொலிதான்; ஆனாலும் அதிலே ஒரு தனிக் கவர்ச்சியிருந்தது. பனித்திவலைகள் உண்டாக்கிய அமைதி

யைப் பெருக்குவதுபோல அந்தக் குழலோசை வானிலே மிதந்தது. எதிர்பார்த்திருக்கும் இன்பத்தைப்பற்றிய நினைவிலே எழுந்த கிளர்ச்சியால் அந்த இசை உருக்கொள்ளுவது போலத் தோன்றியது. கழனி வெளியிலே குபுகுபுவென்று பனி பெய்கின்ற அதிகாலையிலே அணியறியாத அந்தக் குழல் இசையின் மெல்லிய நாதம் எங்கும் பெருகியது. உலகம் கந்தர்வலோகமாக மாறிவிட்டது.

நான் அந்த இசையை அனுபவித்துக்கொண்டே அடியெடுத்து வைத்தேன். ஒரு மரத்தடியிலே கல்லின் மேல் அமர்ந்து ஒரு சிறுவன் புல்லாங் குழல் வாசித்துக் கொண்டிருந்தான். மெதுவாக அவனிடம் சென்றேன்.

குழல் வாசிப்பதை நிறுத்திவிட்டு அவன் என்னை உற்றுப் பார்த்தான். அந்தப் பக்கத்திற்கே புதியவனை ஒருவன் அதிகாலையிலே அங்கு வந்தது அவனுக்கு வியப்பை உண்டாக்கியிருக்கிறது என்பதை எளிதில் அறிந்துகொள்ள முடிந்தது.

"புல்லாங்குழல் மிக இனிமையாக இருக்கிறது" என்று பேச்சைத் தொடங்கினேன்.

சிறுவன் மகிழ்ச்சியால் சிரித்தான்; ஆனால் பதில் ஒன்றும் பேசவில்லை.

"அதிகாலையில் குழல் ஊதுகிறாயே, என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"மாட்டுப் பொங்கலுக்கு இன்னும் நாலு நாள் தானே? ஊதிப் பழகவேண்டாமா?" என்றான் சிறுவன்.

"மாட்டுப் பொங்கலுக்குக் குழல் அத்தனை அவசியமா?"

"குழலூதாமல் பொங்கலேது? பட்டியே அமங்கலமாகப் போகும்" என்றான் சிறுவன்.

"நீ குழலூதுவது மாட்டிற்குத் தெரியுமா?"

"ஓ நல்லாத் தெரியும். சாயங்காலத்திலே நான் குழல் ஊதினால் மாடுகளெல்லாம் எங்கிருந்தாலும் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிடும்."

"உனக்குச் சொந்தமாக மாடிருக்கிறதா?"

"இந்த மாடெல்லாம் என்னுடையதுதான்—நான்தான் அவைகளை மேய்க்கிறவன்" என்று பெருமையோடு சொல்லிக்கொண்டு பக்கத்திலே பட்டியிலிருந்த மாடுகளைக் காண்பித்தான் சிறுவன்.

அந்த மாடுகளை மேய்ப்பவன் அவன்தான். ஆனால் அவற்றின் சொந்தக்காரன் அவனல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் பெரிய பண்ணைக்காரர் பட்டியிலே மாடு மேய்க்கிறவன்.

இருந்தாலும் அந்த மாடுகளையெல்லாம் தன்னுடையதாகவே அவன் கருதுகிறான். அத்தகைய மனப்பான்மை எப்படி உண்டாக முடியும் என்று எண்ணிக்கொண்டே நான் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தேன்.

சற்று தூரம் சென்றதும் மறுபடியும் புல்லாங்குழலின் ஒலி மதுரமாகக் காற்றில் மிதந்து வந்தது. அந்த இசையில் லயித்துப் போனவன்போலக் கதிரவன் மெதுவாக எட்டிப் பார்த்தான். அவனுடையு

பொன் மஞ்சட் கிரணங்களுக்கும் பனித் திவலைகளுக்கும் போட்டியேற்பட்டுவிட்டது. ஆனால் அந்தப் போட்டிக்கிடையிலும் அறுகம்புல்லின் நுனியில் உருண்டு நிற்கும் முத்துச் சொட்டிலே புகுந்து பொற் கதிர்கள் வர்ண ஜாலங்களை வெளிப்படுத்துவதில் தவறவில்லை.

பெரிய பண்ணைக்காரர் எதிரிலே வந்துகொண்டிருந்தார். நான் அவரை இதுவரை பார்த்ததில்லை. அறிமுகமில்லாதிருந்தாலும் அன்போடு அவர் என்னிடம் உரையாடலானார். நாட்டுப் புறத்தின் இயற்கையெழிலைத் துய்க்க நான் வந்திருப்பதை அவரிடம் கூறினேன்.

"பொங்கல் நோன்பு வருகிறது. எங்கள் வீட்டிலேயே இருந்துவிட்டுப் போகவேணும்" என்று அவர் பரிவோடு கூறினார்.

"பொங்கலுக்கு எங்கள் வீட்டிற்கே போகலாமென்றிருக்கிறேன்" என்று நான் மறுமொழி சொன்னேன்.

"இதுவும் உங்கள் வீடுதான். மனமிருந்தால், அன்பிருந்தால் எல்லாம் சொந்தந்தான்" என்றார் பண்ணைக்காரர்.

"உங்கள் உள்ளம் மிகவும் பரந்த உள்ளம். உலகத்திலே எல்லோரும் உங்களைப்போல இருக்கிறார்களா?" என்று உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியை அப்படியே கூறினேன்.

"யார் தலையிலே கட்டிக் கொண்டு போகிறார்கள்? ஏதோ உயிரோடு இருக்கிற வரையிலும் எல்லோரோடும் சமமாக இருந்து எல்லாரும் சந்தோசப்படும்படி செய்தால் அதுதான் நல்லது" என்று அவர் கூறினார்.

மாட்டுக்காரப் பையன் மாடுகளை யெல்லாம் தன்னுடையதாக நினைத்திருப்பதின் ரகசியம் இப்பொழுதுதான் எனக்குப் புலனாயிற்று.

பண்ணைக்காரர் படித்தவரல்ல. கையெழுத்துப் போடக்கூட அவருக்குத் தெரியாதென்று பின்னால் தெரிய வந்தது. ஆனால் அவர் வாழ்க்கையின் ரகசியத்தைக் கண்டுகொண்டிருக்கிறார்.

"உங்கள் பண்ணையிலே பட்டி பெருகவேணும்; பால்பானை பொங்க வேணும். உங்களைப்போல ஆயிரம் ஆயிரம் பண்ணைக்காரர்கள் தோன்ற வேணும்" என்று கூறிவிட்டு நான் அவரிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

இன்று பொங்கல் திருநாள். மாடு மேய்க்கும் அந்தச் சிறுவனுடைய குழலோசையும் பண்ணைக்காரருடைய அன்புச் சொற்களும் இன்பம் பொங்க என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

# அன்பு வழி

மனிதன் ஒரு விசித்திரமான பிராணி. அவனுக்கு அற்புதமான மனம் இருக்கின்றது; அறிவு இருக்கின்றது. இந்த அறிவைப்பற்றிப் புகழ்ச்சியாகப் பலபடப் பேசுவதுண்டு.

"விலங்குகள் தமது சொந்த அனுபவங்களினுல் மட்டும் பயனடையும். ஆனுல் மனிதன் தனது சொந்த அனுபவங்களால் மட்டுமல்லாது மற்றவர்களுடைய அனுபவங்கள், அவனுடைய முன்னேர்களுடைய் அனுபவங்கள் ஆகியவற்ருலும் பயனடைகிருன். அது அவனுக்கிருக்கும்படியான அறிவின் தனிச் சிறப்பு" என்று பெருமையோடு கூறுவார்கள்.

கொதிக்கின்ற பாலில் வாயை வைத்தால் சுடும் என்று பூனைக்குத் தெரியாது. வாயை அதில் வைத்துத் துன்பப்பட்ட பிறகே அது தெரிந்துகொள்ளும். ஒரு பூனை தெரிந்துகொண்டதென்ருல் அதன் குட்டி, அந்தக் குட்டியின் குட்டி ஆகியவைகளும் இந்த அனுபவத்தால் பயனடைய முடியுமா? முடியாது. அவைகளும் தர்மாகவே இந்தத் துன்பத்தை அனுபவித்துத்தான் தெரிந்துகொள்ளும். ஒரு தலைமுறையிலுள்ள பூனையின் அனுபவங்களை எழுதி வைத்து அடுத்த தலைமுறையில் வரும் பூனைகளுக்குப் பயன் படச் செய்ய அவற்ருல் முடியாது. எழுதி வைக்கவும் முடியாது; மற்றவை அவற்றைப் படித்துத் தெரிந்து

கொள்ளவும் முடியாது. ஆனால் மனிதனுடைய நிலை அப்படிப்பட்டதன்று. மனிதன் தனது வரலாற்றை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு எழுதி வைக்கிறான். பின்னால் வருகிற சந்ததியர்கள் அதைப் படித்துப் பயனடையலாம். உலகத்தின் ஒரு மூலையிலுள்ள ஒரு மனிதக் கூட்டத்தின் வரலாற்றை மற்றொரு கோடியிலுள்ள மக்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் படித்துத் தெரிந்துகொள்ளலாம். அந்தக் கூட்டத்தார் அடைந்த அனுபவங்களைக் கொண்டு உலகத்திலுள்ள எல்லா மக்களும் தங்கள் வாழ்க்கையைத் தக்கவாறு மாற்றி அமைத்துக்கொண்டு நல்ல பயனடையலாம்.

மெய்தான்; நல்ல பயனடைந்து முன்னேறலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் மனிதன் அப்படிப் பயனடைகிறானா என்று ஆராயும்போதுதான் நம்பிக்கை குலைகிறது. வரலாற்றுப் பாடம் பள்ளிகளிலே தேர்வு முடிந்ததும் மறந்து போவதாகத் தோன்றுகிறது. இல்லாவிட்டால் முன்னோர் செய்த தவறுகளையே மக்கள் திரும்பத் திரும்பச் செய்வார்களா?

வரலாற்றைப் படிப்பதால் நாம் தெரிந்து கொள்ளுகிற பாடத்தைப் பற்றி பெர்னட்ஷா தமக்கே உரிய பாணியிலே அழகாகக் கூறியிருக்கிறார்.

"வரலாற்றைப் படித்து நான் ஒன்று தெரிந்து கொண்டேன்; அதாவது வரலாற்றைப் படிப்பதால் நாம் ஒன்றுமே தெரிந்து கொள்வதில்லை" என்று அவர் கூறுகிறார். உண்மையான வாக்கு. ஒரு முறை

செய்த தவறை நாம் உணர்ந்து கொண்டதற்கு அடையாளம் அதை மீண்டும் செய்யாமலிருப்பதே ஆகும். இதுவரையில் மானிட சாதி செய்த பல தவறுகளை வரலாறு நமக்கு வெளிப்படையாக எடுத்துக் காட்டுகிறது. அவற்றைப்பற்றியெல்லாம் படிக்கிறோம்; அவை பெரிய தவறுகள் என்று விமரிசனம் செய்கிறோம். ஆனால் அவற்றையே திருப்பித் திருப்பி நாம் செய்து கொண்டிருக்கிறோம். பிறகு வரலாற்றைப் படிப்பதால் என்ன பயன்?

போர் ஏற்படுவதால் எத்தனையோ துன்பங்கள் விளைகின்றன. ஒரு நாட்டின் பெருஞ் செல்வமாகிய இளைஞர்கள் ஆயிரம் ஆயிரமாக மடிகிறார்கள். நாட்டிலே பெருஞ் சேதம் ஏற்படுகிறது. முடிவிலே வெற்றி பெற்ற நாடும் நலிவையே அடைகின்றது. மகாபாரதக் கதை இந்த உண்மையை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது. கௌரவர்கள் தோல்வியுற்று மடிந்தார்கள். பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் அவர்களுடைய நிலைமை தோல்வியுற்றோரின் நிலைமையைவிட உயர்ந்ததாயிருக்கவில்லை. மடிந்தவர்கள் ஒரு வகையில் நல்ல புண்ணியம் செய்தவர்களாகத் தோன்றியது. அதற்குமேல் அவர்களைத் துன்பம் வாட்ட முடியாதல்லவா? ஆனால் வெற்றி பெற்று உயிர் வாழ்ந்த பாண்டவர்கள் இறந்து போன அத்தனை பேருக்காகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. ஆருயிர் மைந்தர்களையும், காதலர்களையும் இழந்தோரின் ஏக்கக் குரலை வாழ்நாளெல்லாம் அவர்கள் கேட்டு வருந்த வேண்டியதாயிற்று. போரால் யாருக்கும் நன்மை

யில்லை என்பதை மகாபாரதம் பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே உலகத்திற்கு எடுத்துக் காட்டி விட்டது. அதன் பிறகு நடந்த ஒவ்வொரு போரும் இதே உண்மையை வலியுறுத்தியிருக்கிறது. ஆனால் யார் அதைச் சரிவர உணர்ந்திருக்கிறார்கள்? மறுபடி யும் மறுபடியும் அதே தவறை உலகம் செய்து கொண்டுதானிருக்கிறது. வரலாற்றைப் படிப்பதால் நாம் ஒன்றுமே தெரிந்து கொள்வதில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறதல்லவா?

"நூறு போர்களைச் செய்த பிறகும் நான் புதி தாக ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லை; போரைப் பற்றி எல்லாம் எனக்கு தொடக்கத்திலேயே தெரி யும்" என்று நெப்போலியன் ஒரு தடவை பெருமை யடித்துக் கொண்டானாம். பாவம், அவனுடைய மூளைக்கு எட்டியது அவ்வளவுதான். ஆனால் அசோகன் ஒரே ஒரு போரைத்தான் நடத்தினான். அதிலேயே அவனுக்கு ஒரு புதிய உண்மை தெரிந்து விட்டது. போர் என்பது மிகக் கொடுமை வாய்ந்தது; அதனால் யாருக்கும் எவ்வித நன்மையும் விளையாது என்று அவன் கண்டுகொண்டான்.

இவ்வாறு யாராவது ஒருவருக்கு உண்மை புலப் படுகிறது. அவர் அதை உலகுக்கு எடுத்துக் காட்ட முயலுகிறார். உலகமும் ஒரு பெரிய போரில் ஈடு பட்டுத் தத்தளிக்கும்போது இந்த உண்மையை அறிந்து கொண்டதுபோலக் குரல் எழுப்புகின்றது. ஆனால் அந்தப் போர் முடிந்த சில ஆண்டுகளுக்குள் அதனால் ஏற்பட்ட இன்னல்களை யெல்லாம் மறந்து

விடுகிறது. போரே கூடாது என்று வற்புறுத்திய அறிஞர்களின் நல்லுரைகளுக்கும் செவிடாய் விடுகிறது. மறுபடியும் பழைய பாதையிலே நடக்கத் தொடங்கிவிடுகிறது. புதிய புதிய அழிவுப் படைகளை உண்டாக்கும் முயற்சியிலே முழுக் கவனத்தையும் செலுத்தத் தொடங்கிவிடுகிறது.

ஆஸ்திரேலியாவுக்குப் பக்கத்திலே முதல் பிரிட்டிஷ் அணுகுண்டுச் சோதனை நடைபெற்றது. பேரச்சந்தரும் இடி முகக்கத்துடனே அது வெடித்ததையறிந்து பிரிட்டிஷ் பிரதமர் உள்ளங் குளிர்ந்தாராம். ஆனல் நமது நாட்டுப் பெரிய விஞ்ஞானியாகிய ஸர் சி. வி. ராமன் அதையறிந்து மகிழ்ச்சி கொள்ளவில்லை. "புத்தருடைய வழியைப் பின்பற்ற முயலும் எனக்கு இந்த அணுகுண்டு வெடி இன்பமூட்டவில்லை. இதனல் உலகுக்கு நன்மை ஏற்படாது" என்று அவர் வெளிப்படையாகக் கூறிவிட்டார். "அணுகுண்டு ஆராய்ச்சியில் முனைந்திருக்கும் நாடுகளின் அடிப்படையான நோக்கம் எனக்குப் பிடிக்கவில்லை. அணுவாராய்ச்சி மானிட சாதியின் இன்பத்திற்குக் காரணமாக அமைந்தால் அதை நான் வரவேற்பேன்" என்று நமது பிரதமர் பண்டித நேரு தமது கருத்தை விளக்கியிருக்கிறர்.

இரண்டாம் முறையாக ஏற்பட்ட கொடிய தோர் உலகப் போர் முடிவடைந்து சில ஆண்டுகளே ஆயின. அதில் அழிந்த நகரங்களெல்லாம் இன்னும் முழுமையாகச் சீரமைப்புப் பெறவில்லை. போரின் கொடுமைகளை நன்கு உணர்த்திக்கொண்டு இடிந்த

கட்டடங்கள் பல இடங்களிலே காட்சியளிக்கின்றன. போரால் ஏற்பட்ட நலிவு இன்னும் தீர்ந்தபாடில்லை. அதோடு போரிலே படுதோல்வியடைந்த நாடுகளுக்கு உதவியளிக்க வேண்டிய பொறுப்பும் வெற்றியடைந்த நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலுங்கூட உலகம் போரின் பயனற்ற தன்மையை நன்கு உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது மூன்றாவது உலகப் போரைப் பற்றிய பேச்சுக் கேட்கின்றது. அதற்கு வேண்டிய ஆபத்தங்களும், அமைதிக்கு வழியென்கிற பெயரால், நடந்துகொண்டிருக்கின்றன.

படையைப் பெருக்கி அமைதியை நிலைநாட்டுவோம் என்று சொல்வதெல்லாம் பொருளற்ற வாசகமாகும். படையால் போர் நேருமேயன்றி அமைதி நிலைபெறாது. படை பெருகினால் ஐயம் பெருகுகின்றது. "அவன் ஐயாயிரம் வெடிகுண்டு விமானம் கட்டியிருக்கிறான்; ஆதலால் நான் பத்தாயிரம் கட்ட வேண்டும். அவனுடைய விமானம் மணிக்கு 500 மைல் பறக்கிறது; என்னுடைய விமானம் 600 மைலாவது பறக்கவேண்டும்; அப்பொழுதுதான் அவன் என்னிடம் சண்டைக்கு வரமாட்டான்" என்ற எண்ணத்தையே நாடுகளுக்கிடையில் விளைவிக்கிறது. படை பெருகப் பெருக இந்தப் போட்டியும் மும்முரமாகிறது; ஐயம் வலுக்கிறது. அவற்றின் பயனாக முதலில் உள்ளத்திலே அமைதி குலைகின்றது; பீதி தலையெடுக்கிறது. உலகம் அறிவை இழந்துவிடுகிறது. பிறகு போர் அரக்கனின் கோரக் காட்சி தோன்றுகிறது.

ஹிரோஷிமாவில் விழுந்த முதல் அணுகுண்டு ஒரே கணத்தில் எண்பதினாயிரம் மக்களின் உயிரைக் குடித்துவிட்டது. இன்று அணுகுண்டின் அழிப்பு வலிமை இன்னும் பல நூறு மடங்கு ஓங்கியிருக்கிறது. அணுகுண்டைவிட ஆயிரம் மடங்கு அழிவுச் சக்தி கொண்ட ஹைடிரஜன் குண்டு தோன்றி விட்டது. இந்த நிலைமையிலே போர் தொடங்கினால் உலகமே ஒரு சில நாட்களில் அழிந்துவிடும்; மானிட சாதியும் முடிந்து போகும். ஒரு நூறு அணுகுண்டுகளும் ஹைடிரஜன் குண்டுகளும் இந்த அழிவைத் திட்டமாகச் செய்து முடித்துவிடும். பூதத்தைப் படைத்த ஒருவன் அதன் கையாலேயே மாய்ந்தது போல மானிட சாதியின் முடிவும் ஆகிவிடும்.

இதைத் தெளிவாக உணர்ந்த சிந்தனையாளர்கள் பலர் உலகத்திற்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். அணுப்படை வழியைப் பின்பற்றினால் மனித வருக்கமே வேரற்று மாண்டு போகும் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியப் பண்பாட்டின் அவதாரமாக வந்த காந்தியடிகள் ஹிம்சையை அறவே களையவேண்டும் என்று வற்புறுத்தினார். அன்பினாலும் அஹிம்சையாலும் நாம் சாதிக்க விரும்புவனவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சாதிப்பதோடு உலகிலே இன்பமும் அமைதியும் ஓங்கச் செய்யலாம் என்பதை அவர் நமது நாட்டுச் சுதந்திரப் போரிலே மெய்ப்பித்துக் காட்டினார்.

அவருடைய உபதேசத்தைக் கடைப்பிடிக்காவிடில் இன்றைய நிலைமையில் மானிட சாதிக்கு உய்வே கிடையாது. எச். ஜி. வெல்ஸ் கூறிச் சென்றது போல மனித இனமே மறைந்துபோகும்படி நேரிடும். ஆதலால் இதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விலங்கு நிலையிலிருந்து பரிணமக்கிரமத்திலே மனிதன் தோன்றியிருக்கிறான். அவனுடைய மூளை வளர்ச்சி பெற்றிருக்கிறது; அவனுடைய மனமும் வளர்ச்சி பெற்று நுட்பமடைந்திருக்கிறது. ஆனால் அவனுடைய விலங்குணர்ச்சிகள் இன்னும் மறைந்து விடவில்லை. மனிதன் தானடைந்துள்ள முன்னேற்றத்திற்கு அறிகுறியாகத் தனது அறிவுத் திறமைகளை மட்டும் எடுத்துக்காட்டுவது போதாது. அன்பு, இரக்கம், கருணை போன்ற அவனுடைய மென்மை உணர்ச்சிகள் எவ்வளவு தூரம் ஓங்கி வளர்ந்திருக்கின்றன என்பதை அவன் எண்ணிப் பார்க்க வேண்டும். அவைகள் ஓங்குவதே உண்மையில் அவனுடைய முன்னேற்றத்திற்கு அறிகுறியாகும்.

அணுகுண்டு முன்னேற்றத்தின் சின்னமல்ல; அது அழிவின் சின்னம்; அது மானிட சாதியின் யமன். அன்பே முன்னேற்றத்தின் சின்னம். அன்பு பெருக இன்பம் பெருகும். அன்பு பெருக மானிட சாதி சுவர்க்க இன்பத்தை உலகில் நிலைநாட்டும், அன்பே உலக அமைதிக்கும் மக்கட்கூட்டத்தின் இன்பத்திற்கும் வழியாகும். அதை விட்டால் வேறு வழி கிடையாது.

# அமைதியும் இன்பமும்

காலை வேளை. நாட்டுப்புறத்திலே ஒரு பண்ணை. ஆட்டுக்குட்டி ஒன்று தாயிடத்தே பாலருந்திவிட்டுத் துள்ளி விளையாடுகிறது. ஆயிரம் ஆயிரமாகப் பொன் மஞ்சள் நிறம் விரித்துக் குலுங்கும் சாமந்தி மலர் களுக்குத் தோட்டக்காரன் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறான். மேய்வதற்காக மாடுகளைப் புல் வெளிக்கு ஓட்டிச் செல்லும் சிறுவன் ஒருவனுடைய தெம்மாங்குப் பாடல் தொலைவிலே கேட்கிறது.

கழனிகளின் இடையிலே அவையெல்லாம் எனக்கு இன்பந் தந்தன. அமைதியையும் ஓய்வையும் நாடிச் சென்றிருந்த என் உள்ளத்திற்கு அருமருந் தாக அவை வாய்த்தன.

அங்கே பரபரப்பைக் காணோம். காலம்கூட மெதுவாகக் காலெடுத்து வைப்பது போலத் தோன் றியது. பட்டணத்துக்கும் அந்த இடத்துக்கும் எத்தனை வேறுபாடு!

அந்த அமைதியான பண்ணைக் காட்சியைக் காலை இளவெயிலிலே நெடுநேரம் துய்த்துவிட்டு நான் தங்கியிருந்த வீட்டிற்குப் புறப்பட்டேன்.

வீடு அந்தப் பண்ணையிலேயே ஒரு மேட்டுப் பாங்கான பகுதியில் இருக்கிறது. பனையோலை வேய்ந்த சிறிய குச்சுவீடு. மின்சார விளக்கு முத

லான நவீன வசதிகளை எதிர்பார்க்காதவர்கள் தங்கு வதற்கு நல்ல இடந்தான்.

நான் வீட்டை அடைகின்றபோது அன்றைய அஞ்சலில் வந்த செய்தித்தாள் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது. பட்டணத்தை மறந்து வந்தாலும் என்னுல் இந்தச் செய்தித்தாளை மறக்க முடிவதில்லை. ஒரு நாளைக்காவது அதன் தரிசனம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் எதையோ இழந்துவிட்டதுபோல ஒரு மயக்கம் தட்டுகிறது. உலகத்திலேயே இல்லையோ என்றுகூட ஐயம் பிறந்துவிடுகிறது.

செய்தித்தாளைத் திறந்தவுடன் எத்தனை அதிர்ச் சிகள்! எத்தனை வகையான உலக விவகாரங்கள்! அரசியல் சூதாட்டம், சூழ்ச்சி, சீர்திருத்தம், சட்டம், அடக்குமுறை, விடுதலை முயற்சி—இவைமட்டும் தானு?—சாவொரு பக்கம், பிறப்பொரு பக்கம், விமான விபத்து, திருமணம், கொலை, களவு, தண்டனை—இவ்வாறு ஆயிரம் வகையான செய்தி கள் நம்மைத் தாக்குகின்றன. இந்தத் தாக்குத லில்லாவிட்டால் இன்று நம்மால் நாகரிக மக்க ளாக வாழ முடியாது. இது ஒருவகையான போதை மருந்தாகிவிட்டது. அதையுண்ட பழக்கத்திற்கு நான் அடிமையாகிவிட்டேன்.

இப்படிக் கூறுவதால் நான் செய்தித்தாளின் பெருமையையும் பயனையும் உணர்ந்துகொள்ள வில்லையென்று யாரும் நினைக்கக்கூடாது. அவற்றை யெல்லாம் நான் நன்கறிவேன்.

ஆனால் கழனிகளிலே மாசற்ற அமைதியிலும் எளிமையிலும் முழுகிக் களித்துவிட்டு வந்த எனக்கு அந்த நொடியில் செய்தித்தாள் கசந்தது. கழனிக் காட்சி என் உள்ளத்தில் எழுப்பிய அமைதியின் நாதத்திற்கு அது ஒத்திசைக்கவில்லை. ஏதோ முற்றிலும் மாறுபட்ட அபசுரம் பேசியதுபோல் நான் உணர்ந்தேன்.

இப்படி உணர்ந்தாலும் செய்தித்தாளைப் படிக்காமல் இருக்க முடிகிறதா? அதுதானில்லை.

உலகத்திலே அமைதியை நிலைநாட்ட இன்று எத்தனையோ முயற்சிகள் நடந்து வருகின்றன. இனிமேல் போர் வருமானால் உலகம் அழிந்து போகும் என்று பலரும் அறிந்து அதைத் தவிர்க்கப் பாடுபடுகிற செய்தியை நாள் தவறினாலும் செய்தித்தாள் தவறாமல் தாங்கி வருகின்றது. ஒவ்வொரு நாடும் அமைதியை நிலைநாட்ட எடுத்துவரும் முயற்சிகளை நாம் நாளும் படிக்கிறோம். அதே சமயத்தில், இந்த அமைதி முயற்சியைக் குலைப்பதற்குப் பிற நாடுகள் என்னென்ன செய்கின்றன என்று கூறும் குற்றச்சாட்டுக்களையும் படிக்கிறோம். ஒவ்வொரு நாடும் பிற நாட்டை ஐயம், அச்சம் என்ற கண்ணாடிகளின் வழியாகப் பார்க்கிறது.

அதனால்தான் செய்தித்தாளைப் படிக்கிறபோது மானிட சாதியின் எதிர்காலத்தைப்பற்றிக் கவலை ஏற்படுகிறது. ஆனால் சாமந்திப் பூக்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் தோட்டக்காரனையும் அவனைச்

சூழ்ந்துள்ள அமைதியையும் பார்க்கும்பொழுது மனத்திற்கு தைரியம் வருகிறது.

அரசியல்வாதிகளும், அறிஞர்களும் உலகத்திலே யாருக்காக அமைதியை நிலைநாட்ட விரும்புகிறார்கள்? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அந்தத் தோட்டக்காரனைப் போன்ற உலகமறியாத எளிய மக்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமை தோன்றுகிறதல்லவா? அவன் அந்தச் சாமந்திப் பூவையே போன்றவன். கபடமில்லாதவன். பூக்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் தனது வேலையை ஒழுங்காகச் செய்துகொண்டிருந்தால் தானும் தன் மனைவி மக்களும் இன்பமாக வாழ முடியும் என்று எண்ணிக்கொண்டிருப்பவன். உலக அரங்கிலே நடைபெறுகின்ற சூழ்ச்சிகளை அறியாதவன். அவனைப் போலத்தான் வேறு தொழிலாளிகளும் இருக்கிறார்கள்; அவனைப் போலத்தான் பெரும்பகுதியான மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய எளிய ஆசைகள் சிதறுண்டு போகாமல் காப்பது சமூகத் தலைவர்களின் கடமையல்லவா?

அந்தத் தோட்டக்காரன் உலகமறியாத எளிய மக்களின் பிரதிநிதி. அதேபோல அவன் வருங்கால மக்களுக்கும் பிரதிநிதி என்று கூறலாம். சிரித்த முகத்தோடு கபடமறியாமல் தோன்றும் குழந்தைகளை அவன் நினைவூட்டுகிறான். அந்தக் குழந்தைகளுக்கு இந்த மாநிலத்தை ஒரு இன்ப வீடாகச் சமைத்துத் தருகின்ற பொறுப்பு இந்தத் தலைமுறையிலுள்ள மக்களுக்கில்லையா?

இந்த எண்ணங்களெல்லாம் அன்று செய்தித் தாளைப் பார்க்கின்றபோது என் உள்ளத்திலே மின்ன லிட்டன. அதனால் எனக்கு வீட்டிலே அடைபட்டுக் கிடக்கப் பிடிக்கவில்லை. அவசரம் அவ்சரமாகக் காலை உணவை முடித்துக்கொண்டு மீண்டும் வெளியே சென்றேன்.

சாமந்திச் செடிகளுக்கு இன்னும் தண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது; ஒரு பாத்திக்கு மடையை மாறித் தண்ணீர் போகுமாறு செய்துவிட்டுத் தோட்டக்காரன் வரப்பிலே அமர்ந்திருந்தான். அவன் மனைவி ஒரு மண்கலயத்திலே பழைய சோறு கொண்டுவந்திருந்தாள். அவள் அதைக் கரைத்துத் தோட்டக்காரன் கைகளிலே ஊற்றினாள். மாங்காய் ஊறுகாயைக் கடித்துக்கொண்டு அவன் மகிழ்ச்சி யோடு சோற்றைக் குடித்துக்கொண்டிருந்தான். ஆட்டுக்குட்டி துள்ளிக் குதிப்பதை நிறுத்திவிட்டு வரப்பிலே வளர்ந்திருந்த அறுகம்புல்லை விளையாட் டாகக் கடித்துக்கொண்டிருந்தது. தண்ணீர் பாய்ந்த பாத்திகளிலுள்ள சாமந்தி மலர்கள் எழிலோடு காட்சியளித்தன.

''தோட்டக்காரா, இன்னும் வேலை முடிய வில்லையா?'' என்று நான் அவனை நோக்கி நடந்து கொண்டே கேட்டேன்.

அவன் சோறு குடித்துவிட்டுக் கையலம்பிக் கொண்டிருந்தான்.

''இதற்குள்ளே முடியுங்களா? தண்ணீர் கட்டி முடிய உச்சிப் பொழுதாகும்'' என்றான் அவன்,

"அதற்கப்புறம் வேலை கிடையாதா?"

"அப்புறமும் வேலை இருக்கும்; வேலையில்லாமல் சோறு கிடைக்குமா? மலர்ந்த பூக்களை யெல்லாம் பறிக்கவேணும். பட்டணத்துக்குப் பூ வாங்கி அனுப்புகிற வியாபாரிகள் அந்தியிலே வருவார்கள். அவர்கள் வருவதற்கு முன்னாலே எல்லாம் சேகரம் செய்தாக வேண்டாமா?"

"இதிலே கிடைக்கிற வருமானம் உனக்குப் போதுமா?"

"இது போதும் சாமி. இந்தப் பூ சுகமா இருந்தால் போதும். அது எனக்கும் என் குடும்பத்துக்கும் சோறு போட்டுவிடும்."

"அதற்குமேல் உனக்கு ஆசையில்லையா?"

"ஆசைக்கு அளவேது, சாமி? இந்தப் பக்கத்திலே இருக்கிற தோட்டமெல்லாம் எனக்கே இருக்க வேணும்னு ஆசை வரத்தான் செய்யுது. ஆனால் இன்னொருத்தர் வாயிலே மண்ணைப் போட்டுத் தானே அதையெல்லாம் நான் வைத்துக் கொள்ள வேணும்? நான் ஆசைப்பட்டால் இந்த ஊருக்கு நூறு ஏக்கரா நிலம் எங்கிருந்தாவது புதுசா வருமா? இருக்கிற நிலந்தானே இருக்கும்? எல்லோரும் அப்படியே ஆசைப்பட்டால் அப்புறம் என்ன நடக்கும்? ஒருத்தனை ஒருத்தன் கழுத்தைத் திருகவேண்டியது தான். அந்த நினைப்பை விட்டுப்போட்டு இருக்கிற நிலத்துக்கு நல்லா எருப்போட்டுப் பாடுபட்டா இன்னும் நிறையப் பலன் கிடைக்கும். வேறொருத்தர்

பொருளை அபகரிக்க வேண்டியதுமில்லை'' என்று அவன் கபடமில்லாமல் வெளிப்படையாகப் பேசினுன்.

அவனுடைய கொச்சை மொழிகளிலே ஆழ்ந்த உண்மை பொதிந்து கிடப்பதை நான் உணர்ந்தேன். எனது சிந்தனை எங்கெல்லாமோ பறந்தது. உலகத்திலே அமைதியைக் காண்பதற்கு, இந்தத் தோட்டகாரனுடைய வாழ்க்கைத் தத்துவம் நல்ல வழி காண்பிக்கும் என்று எனக்குத் தோன்றியது. ''தானும் வாழவேணும், மற்றவர்களும் தன்னைப் போலவே நலமாக வாழவேணும்'' என்று ஒவ்வொருவரும் நினைத்தால் எல்லோரும் வாழ்வார்கள்; உலகம் இன்ப வீடாகும்.

இவ்வாறு எண்ணிக்கொண்டு நான் மௌனமாக நிற்பதைக் கண்டு தோட்டக்காரன் சாமந்திகளுக்குத் தண்ணீர் பாய்ச்சச் சென்றுவிட்டான். ஆட்டுக்குட்டி மட்டும் அருகிலே நின்று என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது.

# பல்லி வாழ்க்கை

படம் இல்லாத வீடுண்டா? அப்படிப்பட்ட வீட்டை நான் இதுவரை பார்த்ததில்லை. எந்த வீட்டுக்குப் போனாலும் அதன் சுவர்களில் படங்கள் தொங்குகின்றன. தெய்வங்களின் வெவ்வேறு வகையான கோலங்கள்தாம் பெரும்பாலும் காட்சியளிக்கும். தெய்வ நம்பிக்கையற்றவனுக்கும் இந்தப் படத்தின் பக்தி மட்டும் குறைவதில்லை. அவன் நாட்டுத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் படங்களை மாட்டி வைக்கிறான்; இல்லாவிட்டால் கலையின் பெயரால் சுவரை அழகு செய்ய முயல்கிறான். தனக்குப் பிடித்தமான ஆட்டக்காரர்கள், சினிமா நட்சத்திரங்கள், முற்போக்குச் சிற்பிகள், பேனா மன்னர்கள், புரட்சி வீரர்கள் என்றிப்படிப்பட்டவர்களின் படங்களிலே மனதைப் பறிகொடுத்தவர்கள் மிகப் பலர். அந்த ஆசையையும் துறக்க முயன்றவன் தன்னுடைய உருவப் படத்தையாவது மாட்டி வைப்பான். மனைவி மக்களின் உருவப் படங்களை எதிரிலே காட்சியாக வைத்துக்கொள்ள ஆசைப்படாதவர்கள் யார்? பள்ளியறையில் சான்றோர் படங்களை மாட்டுவோர் அதற்குக் கூறும் காரணங்களையும், நிருவாணப் படங்களை மாட்டுவோர் அதற்குக் கூறுத காரணங்களையும் நான் அறிவேன்.

இந்தப் படங்களிலிருந்து ஒருவனுடைய உள்ளப் பாங்கை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். அவு

னுடைய விருப்பு வெறுப்பு, கட்சிக் கொள்கை, சமயப்பற்று எல்லாம் படங்களிலே சாயல் காட்டும்.

ஆனால் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவது எனக்கு இங்கே நோக்கமல்ல. என் வீட்டுச் சுவர்களிலும் சில படங்கள் தொங்குவதில் தனிப்பட்ட ஆச்சரியம் ஒன்றுமில்லை என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தவே நான் முயற்சி செய்கிறேன்.

படிப்புக்கும் எழுத்து வேலைக்கும் பயன்படும் எனது மேஜைக்கு முன்னால் புத்தருடைய திருவுருவத்தை நான் தொங்கவிட்டிருக்கிறேன். படத்தைச் சுவரோடு ஒட்டினாற்போல வைப்பது அத்தனை அழகாயிராது என்பது என்னுடைய எண்ணம். படத்தின் கீழ் விளிம்பு சுவரைத் தொட்டுக் கொண்டும் மேல் விளிம்பு முன்னால் சற்று சாய்ந்தும் இருக்க வேண்டும். அதுதான் எனக்குப் பிடிக்கும்.

புத்தர் தமது தோள்களிலே ஒரு நொண்டி ஆட்டைச் சுமந்துகொண்டு அன்பு மயமாகக் காட்சி தருகிறார். விசாலமான அவருடைய கண்களிலே கருணை ஒளி வீசுகிறது. இதழ்களிலே சாந்தியின் புன்முறுவல். பிம்பிசாரன் செய்யும் யாகத்திலே பலியிடுவதற்காக ஓட்டிச் சென்ற ஆடுகளிலே ஒன்று கால் ஊனமாகி நடக்கமாட்டாமல் நொண்டி நொண்டி வருந்தியது. அதைத் தற்செயலாகக் கண்ணுற்ற புத்தர் அந்த ஆட்டைத் தூக்கிக்கொண்டு நடக்கலானார். அன்பு வழிக்கு அரசனை மாற்றச் செல்லும் புனித யாத்திரை தொடங்குகிறது. அந்த

உன்னதக் காட்சியைத்தான் ஓவியன் தீட்டியிருக்கிறான்.

நேற்றிரவு மேஜையருகில் அமர்ந்து சிறுகதைத் தொகுதியொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால் உள்ளம் கதைகளிலே ஊன்றவில்லை; குறியொன்றுமின்றி எங்கேயோ அலைந்தது.

புத்தர் படத்திற்குப் பின்னால் பதுங்கியிருந்த பல்லியொன்று திடீரென்று வெளிப்பட்டுச் சுவரிலே ஒட்டிய ஒரு பூச்சியைப் பிடித்துக்கொண்டு ஓடி மறைந்தது. என்னுடைய கவனம் அதன்மேல் சென்றது. அதே கணத்தில் உள்ளத்திலே கோபம் குமுறியது.

அன்புருவமான அந்த மகானின் நிழலை இந்த அற்பப் பல்லி எப்படிப் பயன்படுத்துகிறது பார்த்தீர்களா? அதற்கு எத்தனை கொழுப்பு, எத்தனை தந்திரம், எத்தனை வஞ்சனை! அதனுடைய கொலைத் தொழிலுக்கு அந்தப் புனிதனையா பதுங்கிடமாகக் கொள்ளுவது? உயிர்ப் பலியை விலக்கச் செல்லும் அந்த அஹிம்சாமூர்த்தியின் பின்னாலிருந்தா இப்படி உயிரை வாங்குவது? நினைக்க நினைக்க எனக்கு அந்தப் பல்லியின்மேல் ஆத்திரம் பொங்கிற்று. அதை ஒரே அடியில் அடித்து நொறுக்க வேண்டுமென்று துடித்துக்கொண்டு எழுந்தேன்.

ஐயன் புத்தனின் வதனத்திலே தவழ்ந்த சாந்திமயமான புன்னகை அப்பொழுதும் மாறவில்லை. அவர் என்னைப் பார்த்து ஏதோ சற்று ஏளனமாகச் சிரிப்பது போலவும் எனக்குப் பட்டது.

அடிக்கோலை எடுத்துக்கொண்டு ஓங்கிய கை தானாகவே தணிந்தது. நெஞ்சிலே எண்ண அலைகள் மோதின.

"அந்தப் பல்லியின்மேல் உனக்கேன் இத்தனை கோபம்? பகுத்தறிவில்லாத உயிர் அது. ஆனால் ஆறறிவுடைய மனிதர்கள் இப்படி மகான்களின் மறைவிலிருந்துகொண்டு கொடுமை செய்வதில்லையா?" என்று யாரோ கேட்பது போலிருந்தது.

ஆசனத்தில் அமர்ந்து நான் சிந்தனையில் மூழ்கினேன்.

மகான்களின் பெயரை மேடையின்மீது நின்று மக்கள் கூசாமல் முழங்குகிறார்கள். அவர்களைப் பின்பற்றுவதாக வேடமும் புனைகிறார்கள். ஆனால் சொல்லுக்கும் தோற்றத்திற்கும் மாறாக அவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்! வரலாறு இதற்குச் சான்று பகர்கின்றது; சற்று ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு நாள்தோறும் கரவினில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வெளிச்சம் தருகின்றன. அரசியலிலே, சமூக வாழ்விலே, தொழில் முறையிலே,வாணிகத்திலே, கலையிலே எல்லாத் துறைகளிலும் பைம்மறியாகப் பார்க்கும் போது நேர்மைக்கு முன்னால் இந்த வேடத்தையும் காண்கிறோம். நாட்டு அரங்கிலும், உலக அரங்கிலும் இதன் அடி நீரோட்டப் பின்னணிக் காட்சி பதுங்கியிருக்கிறது. எல்லோருமா அவ்வாறு இருக்கிறார்கள்? இல்லையில்லை. அப்படி நினைத்தால் அது தவறு. ஆனால் மனிதர்களிலும் பல்லிகள் உண்டு என்பது மட்டும் நிச்சயம்.

இவ்வாறு எனது சிந்தனை மானிட சாதியின் பல்லி வாழ்க்கையைப் பற்றி நின்றபோது உள்ளம் தானுகவே குறுகுறுத்தது. இதுதான் தருணமென்று மனச்சான்று எழுந்து மார்பை நிமிர்த்தி நின்று பேசத் தொடங்கிற்று.

ஒவ்வொரு மனிதனுக்கும் மனச்சான்று என்று ஒன்றிருக்கிறதல்லவா? செல்லக் கூடாத நெறிகளி லெல்லாம் செல்லுவதற்கு மனம் ஆசைப்படும். இந்த மனச்சான்று அதைத் தடுக்க முயலும். பல சமயங்களிலே மனச்சான்று தோற்றுப் போகும். ஆனுல் சில சமயங்கள் அதற்குப் பெரிதும் சாதகமாக அமைந்துவிடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றுதான் இப்பொழுது எனது மனச்சான்றுக்கும் வந்திருக்கிறது.

"உலகத்தைப் பற்றியெல்லாம் குற்ற விசாரணை செய்யப் புறப்பட்டு விட்டாயே, உனது நெஞ்சத்தை தொட்டுப் பர்ர்த்துக் கொண்டாயா? புத்தருடைய படத்தை எதிரிலே வைத்துக் கொண்டிருக்கிருயே, அது எதற்கு? புத்தரைப் போல அன்பு வாழ்விலே தோய்ந்தவனென்று உன்னைப் பார்க்க வருகிறவர்கள் நம்ப வேண்டுமென்பதுதானே உன்னுடைய விருப் பம்? உண்மையிலேயே அவரைப் பின்பற்ற நீ முயன் றிருக்கிருயா? சற்று முன்புகூட நீ எதற்காக அடிக் கோலை ஓங்கினுய்? நீ பேசுவதையும், எழுதுவதையும் பின்பற்றி நடக்க முயன்றிருக்கிருயா? அந்த முயற்சி யில் மனதார ஈடுபட்டாயா? அதில் தவறியபோது அதற்காக வருந்தி மீண்டும் அதே தவறைச் செய்யக்

கூடாது என்றுவது உறுதி செய்து கொண்டிருக்கிறுயா? அந்த எண்ணம் ஒன்றிருந்தாலே போதும். அது உண்டா? எண்ணிப் பார்'' என்று மனச்சான்று மளமளவென்று பொழிந்தது. அதை எதிர்த்துப் போர் தொடுக்க அந்த வேளையிலே எனது உள்ளத்திற்குத் துணிச்சல் வரவில்லை. அது பெட்டிப் பாம்பைப்போல அடங்கிக்கொண்டது.

பல்லியை அடிக்க மறுபடியும் நான் முயலவில்லை. என்னுடைய குறைகளையும் தவறுகளையும் பற்றிய ஆராய்ச்சியில் அழுந்தினேன். இவ்வாறு என்னையே நான் எண்ணிப் பார்த்துக் கொள்வதற்குத் தூண்டு கோலாக இருந்த அந்தப் பல்லியை எனது குருவாகக் கூட மதிக்கலாம் என்ற உணர்ச்சி மெதுவாக மேலெழுந்தது.

# குறிக்கோள்

திருமூலர் கதை உங்களுக்குத் தெரியுமா? அவருடைய இயற் பெயர் திருமூலரல்ல; சுந்தரநாதர் என்பதுதான் அவருடைய பெயர். அவர் மூலனாக மாறிய கதை மிகுந்த சுவையுடையது.

சுந்தரநாதர் வடகயிலையிலிருந்து புறப்பட்டு, சிவத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடு துறைக்கு வந்தாராம். பின்பு அங்கிருந்து பொதிய மலையை நோக்கிப் புறப்பட்டுக் காவிரிக்கரையை அடைந்தார். அங்கே ஓரிடத்தில் மூலன் என்ற இடையன் தன் காலம் முடிவுறவே இறந்து கிடந்தான். அவன் அன்புடன் மேய்த்த மாடுகள் அவனைச் சுற்றிலும் நின்று கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தன. இந்தக் காட்சியைக் கண்ட சுந்தரநாதரின் உள்ளம் உருகிற்று. அந்த மாடுகளின் துயரைப் போக்கவேண்டும் என்ற ஆவல் அவருள்ளத்தில் பொங்கிற்று. தவ வலிமையால் அவர் தமது உயிர் மூலனுடைய உடலில் புகுமாறு செய்தார். மூலன் துயில் நீங்கி எழுவதுபோல எழவே மாடுகள் எல்லாம் பெருமகிழ்ச்சி எய்தின. சுந்தரநாதர் பிறகு அந்த உடம்பிலேயே இருக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு உயிர் பெற்ற மூலனே திருமூலராகப் போற்றப்படுகிறான்.

இது உண்மையாக நடந்திருக்குமா என்று ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்கள் செய்து கொள்

ளட்டும். எனக்கு அதில் அக்கறையில்லை. இந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

திருமூலருடைய கருணை உள்ளம் என்னைப் பெரிதும் கவர்கிறது. மாடுகளின் துன்பத்தைக் காணச் சகியாமல் அவர் அத் துன்பத்தைப் போக்க முன்வந்திருக்கிறார். அதற்காக எத்துணைப் பெரிய தியாகத்தையும் செய்ய அவர் பின்வாங்கவில்லை.

அன்பு என்பது எல்லாவிதமான வரம்புகளையும் உதறித் தள்ளிவிட்டு மேலெழுகின்றபோது சத்திய வடிவனான இறைவனை அடைகின்றது என்று கபீர் தாசர் பாடுகிறார். 'அன்பே சிவம்' என்று திருமூலர் அருளியிருக்கிறார். அன்பையும் இறைவனையும் அவர் ஒன்றாகவே காண்கிறார்.

" அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார் "

என்று அவர் அன்பின் பெருமையைப் பாடியிருக்கிறார்.

நமது நாட்டுப் பெரியோர்கள் மற்றொரு பெரிய உண்மையை வெளியிட்டிருக்கிறார்கள். எல்லா உயிர் களிலும் இறைவன் உறைகின்றான் என்பது அந்த உண்மை. இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான் என்று விரிவுபடுத்தியும் இதைக் கூறலாம்.

என்னுடைய உள்ளத்தை இறைவன் கோயி லாகக் கொண்டிருக்கிறான். ஆனால் நான்தான் அதை உணர்ந்து கொள்ளவில்லை. அதற்கு வேண்டிய பக்கு வத்தை நான் அடையவில்லை. என்னுள்ளே இறைவன்

வீற்றிருப்பதுபோலவே அவன் எல்லா உயிர்களிலும், எல்லாப் பொருள்களிலும், எங்கும் இருக்கிறான்.

ஆகவே அவனுக்குச் செய்கின்ற தலைசிறந்த பூசை அவனுடைய வடிவங்களாக விளங்கும் உயிர்களிடத்தும், மற்றப் பொருள்களிடத்தும் அன்பு கொள்ளுவதேயாகும். 'ஆருயிர்க்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்று இராமலிங்க வள்ளலார் பாடியதும், மண்ணாங்கட்டி ஒன்றின் வடிவம் குலைந்தபோது அவர் அதற்காக வருந்தியதும் இந்த உண்மையை உணர்ந்துதான்.

எல்லா உயிர்களிலும், எங்கும் இறைவன் இருக்கிறான் என்பதை மெய்ப்பிக்க முடியுமா என்று சிலர் கேட்கலாம். என்னால் முடியாது; நிச்சயமாக முடியாது. ஆனால் என்னால் சாதிக்க முடியாதன வெல்லாம் பொய்யென்று போய்விடா.

எனக்கு இதை மெய்ப்பிக்க வேண்டும் என்ற கவலையும் இல்லை. விவேகாநந்தரைப்போல ஒருவர் உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற மெய்யான ஆவலால் உந்தப்பட்டு இந்தக் கேள்வியைக் கேட்டால் இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போன்ற தகுதி வாய்ந்த ஒருவர் இதற்குத் தெளிவான பதிலைக் கொடுக்க அங்கே இருப்பார். அதில் எனக்கு ஐயம் இல்லை. சான்றோர்கள் கூறியுள்ள உறுதி மொழி எனக்குப் போதும்.

'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி' என்ற வாக்கில் எனக்கு நம்பிக்கை உண்டு. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று பாடியவருடைய

உள்ளத் தூய்மையிலே எனக்கு அளவில்லாத நம்பிக்கையுண்டு. இவ்வாறு பல சான்றோர்களின் மெய்யுரைகளை நான் என் நம்பிக்கைக்கு ஆதாரமாகக் காண்பித்துக் கொண்டே போகலாம். ஆனால் அது தேவையில்லை. நான் பாரதியாரோடு சேர்ந்து,

"காக்கை குருவியெங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்று ஜயபேரிகை கொட்டி முழக்க ஆசைப்படுகிறேன்.

கடவுள் நம்பிக்கை கொள்ளச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் இதை எழுதவில்லை, "உலகமே ஒரு குடும்பம்; அதில் பிரிவினைகள் செய்வது தவறு; எல்லோருக்கும் அன்பு செய்வதே நமது கடமை" என்ற கொள்கைகளை வற்புறுத்தவே தத்துவ அடிப்படையிலே எனக்கு வலிமை தரும் உண்மைகளை எடுத்துக் கூறினேன். எனக்குச் சமய நூல்களிலே பரிச்சயம் அதிகமில்லை. இருப்பினும் எனக்குத் தெரிந்த அளவிலே இந்து சமய மட்டுமல்லாமல் எல்லாச் சமயங்களும் அன்பு செய்வதைத் தலைசிறந்த வாழக்கை நெறியாகக் கூறுகின்றன என்று நான் தயக்கமின்றிக் கூறமுடியும்.

விஞ்ஞான அறிவு இன்று வளர்ந்திருக்கும் அளவையும், அதன் காரணமாக அழிவுப் படைகள் உருவாக்கப்பட்டிருக்கும் நிலையையும் எண்ணிப் பார்த்து மானிட சாதியின் நலத்தை நாடுவோர் இந்தத் தத்

துவக் கருத்தை எம்முறையிலேனும் எங்கும் பரப்ப வேண்டுவது மிக முக்கியம்.

வீரர்கள் போர்க்களத்திலே காட்டிய அசகாய சூரத்தனத்தையும், துணிவையும், அவர்கள் பெற்ற பெரு வெற்றிகளையும் பற்றிப் புகழ்ந்து பேசுவது இனிமேல் உகந்ததல்ல; சிறந்த பண்பாடுமல்ல. எந்த நாட்டு மக்களும் அந்நாட்டு வீரர்களைப் பற்றித் தனிப்பெருமை கொள்ள வேண்டியதில்லை. வீரம் என்பது அவர்களுக்கு மட்டும் வாய்த்த பண்பல்ல. நடுநிலைமையோடு அமைதியாக ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த வீரர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். உயிருக்கு அஞ்சாது போரிலே சிறப்பெய்தியவர்கள் எங்கும் உண்டு. அப்படிச் சிறப்பெய்த வேண்டும் என்பதே ஒரு வெறியாக மாறியதும் உண்டு. மக்கள் அத்தகைய வீரத்தைப் பாராட்டிப் பெருமைப் படுத்தியதே அதற்கு முக்கிய தூண்டுகோலாகவும் இருந்துள்ளது. அவர்களுடைய வீரத்தையே பெரிதாக இளைஞர்களின் முன்னே நிறுத்திக் காட்டினர். அந்த வீரம் அவர்களிடத்தேயும் மிகுந்து காணப்படல் வேண்டும் என்கிற குறிப்பும் அடிப்படையாக நின்றிருந்தது. நாடு என்ற எல்லைக்குள்ளே நின்று அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமே மிகுந்திருந்த காலத்தில் இது ஒரு வேளை தவிர்க்க முடியாததாக இருந்திருக்கலாம். இன்று அந்த எல்லையிலே நின்று மார் தட்டுவது காலத்திற்கேற்றதல்லாத பழங் கொள்கையாக மாற வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

பிறருடைய நலத்திற்காக எவ்விதமான துன்பத்தையும் பொருட்படுத்தாமல் துணிந்து சேவை செய்தவர்கள், தம்மையே தியாகஞ் செய்தவர்கள், உயர்ந்த உண்மைகளை எடுத்துக் கூறியவர்கள் ஆகியோர் காட்டிய வீரத்திற்கு இணையானது வேறொன்றுமில்லை என்பதை இன்று நாம் சிறப்பாக எடுத்துக் காட்ட வேண்டும். 'உயிரைக் கொல்வது யாருக்கும் சாத்தியமாகும்; ஆனால் ஓர் உயிரைச் செழிக்கச் செய்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதைச் செய்பவனே உயர்ந்தவன்' என்ற புத்தர் அருள்வாக்கு மேலோங்கி முழங்க வேண்டும். போர் முரசைக் கொட்டி மக்களின் விலங்குணர்ச்சியை எழுப்புவது இன்றும் எளிதாகவே உள்ளது. அன்புணர்ச்சியை எழுப்புவது அவ்வளவு எளிதாக இன்று தோன்றவில்லை. ஆனால் அதைச் செய்வதுதான் சிறப்பு. அன்புணர்ச்சி மேலோங்கி நின்ற காலத்தில் மக்கள் எவ்வளவு உயர்ந்த தியாகம் செய்திருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அந்த மென்மை உணர்ச்சியே நிலைத்து நின்று ஆட்சி புரியச் செய்வது தான் இன்று நாம் செய்யவேண்டிய புனிதமான சேவையாகும்.

அதற்கு நான் மேலே காட்டியதுபோல நமது சமயமும் தத்துவமும் வலிமை தருகின்றன.

அந்த வலிமையிலிருந்தே, 'தின்ன வரும் புலி தன்னையும் அன்பொடு சிந்தையிற் போற்றிடுவாய்' என்று பாடக்கூடிய துணிவு பிறக்கின்றது.

மெய்யுணர்வானது எவ்வாறு ஒருவனுக்குப் பிறக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கு இராம

கிருஷ்ண பரமஹம்சர் ஓர் அழகான கதை சொல்லி யிருக்கிறார்.

ஒரு கிராமத்திற்குப் பக்கத்திலே ஓர் ஆச்ரமம் இருந்தது. அதில் தங்கியிருந்த சாதுக்களில் ஒருவர் சாலை வழியாக எங்கோ போய்க்கொண்டிருந்த போது ஒரு ஜமீன்தார் ஏழை ஒருவனைச் சாட்டை யால் அடிப்பதைக் கண்ணுற்றார். அவரால் அதைச் சகிக்க முடியவில்லை. 'அடிக்க வேண்டாம்' என்று பரிவோடு ஜமீன்தாரைக் கேட்டுக்கொண்டார். ஜமீன்தாருக்கு முன்னிலும் அதிகமான கோபம் அந்த சாதுவின் மேல் பொங்கி எழுந்தது. அந்த ஏழையை விட்டுவிட்டுச் சாதுவின் மேல் பாய்ந்தார். சாட்டை யால் அவரை அடித்து நொறுக்கினார். சாது மூர்ச்சை யுற்றுப் பிணம் போலத் தரையிலே விழுந்தார்.

மூச்சின்றிப் பேச்சின்றிக் கிடந்த சாதுவை யாரோ கண்டு, அவர் நிலைமைபற்றி ஆச்ரமத்தி லுள்ள மற்ற சாதுக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். அவர்கள் ஓடோடியும் வந்து மூர்ச்சையுற்ற சாது வைத் தூக்கிக்கொண்டு ஆச்ரமத்திற்குத் திரும் பினார்கள்.

ஆச்ரமத்திலே ஓரிடத்திலே அவரைப் படுக்க வைத்தார்கள். அப்பொழுதும் அவருக்கு உணர்வு வரவில்லை. அதனால் கவலையடைந்த சாதுக்கள் பல வகையான சிகிச்சைகள் செய்யத் தொடங்கினார்கள்.

ஒருவர் அந்த சாதுவின் தலையைத் தம் மடியின் மேல் வைத்துக்கொண்டு மெதுவாக வாயில் கொஞ்சம் பாலை ஊற்றினார். மெதுவாக சாது கண்

களைத் திறந்து பார்த்தார். எல்லோருக்கும் கவலை நீங்கிற்று. இருந்தாலும் அவருக்கு நினைவு முற்றிலும் வந்துவிட்டதா என்பதில் ஐயமிருந்தது.

பாலை வாயிலே ஊற்றியவர், "என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் யார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்" என்று மெதுவாகக் கேட்டார்.

தன்னுணர்வு பெற்ற சாதுவிடமிருந்து அதற்கு அற்புதமான பதில் ஒன்று கிடைத்தது. "உங்களை எனக்கு நன்முகத் தெரிகிறது. எந்தக் கை என்னை முன்பு அடித்ததோ அதே கை எனக்கு இப்பொழுது பால் வார்க்கிறது. யார் என்னை அடித்தாரோ அவரே எனக்கு இப்பொழுது பால் கொடுக்கிமுர்" என்று அந்த சாது கூறினுராம். தம்மை அடித்து மூர்ச்சையடையச் செய்தவருக்கும், பிறகு மூர்ச்சை தெளியும்படி அன்போடு உதவி செய்தவருக்கும் உள்ள வேறுபாட்டை மறந்து அவ்விருவரிடத்திலும் விளங்குகின்ற இறைவனுடைய உணர்விலேயே நின்முர் அவர்.

திருமூலர் கதையைப் போலவே இந்தக் கதையும் என் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது: அந்த சாதுவின் மனப்பக்குவம் நமது குறிக்கோளாக நிலைத்து நிற்க வேண்டும். அதுவே இன்பத்திற்கு வழி; அதுவே மானிட சாதியை ஓங்கச் செய்யும் மந்திரம்.

★